Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 37—No. 1

CONNEMARA PUBLIC LIBRARY
18 JAN 1964
MADRAS

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 37 | சோபகிருது தை 1964 ஜனவரி | இதழ் 1

உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| புதுவை மாநாடு ... | 1 |
| சமாஜ 58-ஆம் ஆண்டு விழா ... | 4 |
| தீர்மானங்கள் ... | 10 |
| சமாஜச் செய்திகள் ... | 13 |
| மதிப்புரை ... | 16 |
| கொடியேற்ற உரை—அனுபந்தம் | |
| வரவேற்புரை—அனுபந்தம் | |

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்

சைவ சித்தாந்த மகா சமாஜம்
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணா 4

# 1964 ஆம் ஆண்டின் சமாஜப் பணியாளர்கள்

புதுவையில் 29—12—63ல் நடந்த சமாஜ உறுப்பினர் பொதுக் கூட்டத்தில் 1964 ஆம் ஆண்டிற்குக் கீழ்க்காணும் சமாஜப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். (ஒவ்வொருவர் பெயரின் முன் 'திருவாளர்' என்றும் பின் 'அவர்கள்' என்றும் சேர்த்துப் படிக்கவும்)

1. தலைவர் :- ஜி. எம். முத்துசாமி பிள்ளை ;
ஐ. ஏ. எஸ். (ரிடையர்டு)
2. துணைத்தலைவர்கள்:—நல். முருகேச முதலியார் பி. ஏ.
தி. கி. நாராயணசாமி நாயுடு, கடலூர்
3. செயலாளர் :- C. N. சிங்காரவேல் முதலியார் எம். ஏ.
4. உதவிச் செயலாளர் :-மு. நாராயணசாமி முதலியார்,
5. பொருளாளர் :— வி. ஆறுமுக முதலியார்,
6. பத்திராசிரியர் :— மு. அருணாசலம் எம். ஏ.,
7. உதவிப் பத்திராசிரியர் :- வித்துவான்
அம்பை. சங்கரனார்
8. மாதக் கணக்குப் பரிசோதகர் :- M. சிவராமன்
9. ஆண்டுக் கணக்குப் பரிசோதகர் :-
எம். இ. சிவஞான சம்பந்தம் பி. ஏ.,

செயற்குழுவினர் :— 1. சிவநேசன் செட்டியார் 2. அ. சோமசுந்தரஞ் செட்டியார் எம். ஏ., 3. ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி., 4. C. Y. அமலநாதன் 5. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்., 6. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் எம். ஏ., 7. பி. திருஞான சம்பந்தம் பிள்ளை எம். ஏ., எல். டி., 8. ஜி. வடிவேலாயுதம் எம். ஏ., 9. என். டி. கிருஷ்ணசாமி எம். ஏ., பி. டி., 10. கி. சே. பழனிவேலு 11. கெ. சி. நாகலிங்க முதலியார் 12. சந்திரசேகர முதலியார்.

பணியாளர்குழு :- சர். கந்தையா வைத்தியநாதன் (இலங்கை) க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ., எல். டி.. சு. நடேச பிள்ளை பி. ஏ., பி. எல்., பு. ர. சுவாமிநாதன் எம். ஏ. எல். டி. மஞ்சக் கொல்லை சம்பந்தமூர்த்தி முதலியார், S. நடராஜ நாடார் பி. ஏ., பி. எல்., க. வெள்ளை வாரணம், சிதம்பரம், காமாட்சி அம்மாள் எம். ஏ., ஆறு. அ. ராம. சொக்கலிங்கஞ் செட்டியார், காரைக்குடி.

பத்திராதிபர் ஆலோசனைக் குழு :- எஸ். அம்பிகை பாகன் பி. ஏ., (இலங்கை) வட்டுக்கோட்டை நாகலிங்கம்

Reg. M. 2330

உ
சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

CONNEMARA PUBLIC LIBRARY
MADRAS
680

மலர் 37 | சோபகிருது தை 1964 ஜனவரி | இதழ் 1

## புதுவை மாநாடு *

(பத்திராசிரியர்)

புதுவையில் நடந்த சமாஜ மாநாடு பலவகையாலும் சிறப்புடையது. சிறப்பின் அம்சங்கள் சிலவற்றைக் கீழே கூறுவோம்.

முதலாவது தொடக்க உரை:— புதுவை ராஜ்யத்தின் முதலமைச்சரான திரு எதுவார் குபேர் அவர்கள் தொடக்க உரை ஆற்றினார். அவர் கிறித்தவர்; ஆனால் எவ்விதமான வேற்றுமையும் கருதாமல், மிக்க அழகான முறையில் விசால மனத்தோடு சைவ சமய அடிப்படை உண்மைகளை அவர் ஏற்றுப் பாராட்டிப் பேசியது புதுவைக்கே உரிய ஒரு தனிச் சிறப்பு.

“சைவ சித்தாந்த சமாஜத்தின் மாநாடு இங்கே நடைபெறுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகிறது. இன்றைய உலகம் விஞ்ஞான உலகம்; அணு உலகத்தைத் தொடர்ந்து விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. இதன் விளைவாக உலகெங்கும் பரபரப்பான சூழ்நிலை நிலவுகிறது. அச்சமும் அவநம்பிக்கையும் நிரம்பியுள்ள மக்கள் வாழ்க்கையில் மன அமைதியும் ஆறுதலும் விளைக்க வல்லது சமய உணர்ச்சி ஒன்றே. வேதாந்த ஆராய்ச்சி மனித வாழ்விற்கு வேண்டுவதுதான். நாகரிகத்தின் அறிகுறியாவன விஞ்ஞான ஆராய்ச்சியும், தத்துவ ஆராய்ச்சியும். விஞ்ஞான ஆராய்ச்சி, அச்சத்திற்கும் நாசத்திற்குமே நம்மைச் செலுத்துவதைக் காண்கிறோம். மனிதனை மேம்படுத்துவதற்கான போக்கு இன்றைய நிலையில் அதனிடத்து நாம் காணவில்லை. ஆனால் தத்துவ ஆராய்ச்சியோ, அறிவிற்குவிருந்து

ஆவது மட்டுமல்ல, வாழ்க்கையை நடத்திச் செல்வதற்குச் சிறப்பான வழிகாட்டியாயுமுள்ளது. இன்ப துன்பங்களில் அலைவுற்ற மனிதன் வாழ்க்கையில் அமைதிதேடுகிறான். அந்த அமைதியைக் கடவுள் உணர்ச்சி மூலம் அவன் பெறுகிறான். கடவுள் ஒருவரே. அக்கடவுளைச் சைவ மக்கள் சிவம் என்று சொல்லுகிறார்கள். உலகோர் அனைவரும் சொல்லுவதும் அந்த ஒரு கடவுளைத்தான். சிவம் என்றால், பலர் தவறாக நினைப்பது போல, அழிக்கின்ற சக்தியல்ல; சிவம் அழிப்பது தீமையை; உலகில் தீமை நீங்க வேண்டும். உலகில் தீமையைச் சிவபெருமான் அழிக்கிறார் என்று கொள்வது நல்லது. ஆகவே உலகத்திற்குச் சிவபெருமான் நன்மையேசெய்கிறார். நன்மைதீமை இவற்றின் பயனைக் கண்முன்னே நாம் காண்பதில்லை. சாலை ஓரத்தில் மரம் வைப்பவர்கள் தாங்கள் அனுபவிப்பதில்லை. உலகத்தாருக்காகவே அப்படிச் செய்கிறார்கள். அதுபோல உலகத்தைக் கருதியே நன்மைகளைச் செய்து வரவேண்டும். செயல் மாத்திரம் அல்ல; நினைப்பும் அதிக வலிமையுடையது. நம் மனத்தில் யாரைப் பற்றியும் கெட்ட எண்ணம் இருத்தல் ஆகாது. நம்முடைய தீய நினைவுகள், நமக்குத் தீமை செய்ய எண்ணும், பிறருடைய தீய எண்ணங்கள் வந்து முளைத்து வளர்ந்து தீமை தரும் நாற்றங்கால் ஆகவும் விளைநிலமாகவும் ஆகிவிடுகின்றன. நம் நினைவு தூய்மையாக இருந்தால், பிறருடைய தீய நினைவு முளைக்காமலே போகிறது. "கேடு நினைப்பவனே கெடுவான்" என்பது மெய்யானவார்த்தை. இங்குக் கூடியுள்ள சமாஜ மகா நாட்டின் மூலம் சைவம் பெருகுவதோடு, உலகில் தெய்வ பக்திமிகுந்து தீமை விலகுமாக" என்று குபேர் பேசினார்.

இரண்டாவதாக:—இளைஞர் மகா நாட்டில் முகமத் ஆரிப் என்ற ஆசிரிய இளைஞர், சமயமும் கல்வித்திட்டமும் என்பது பற்றி மிகவும் நல்ல மொழியில் சிறந்த கருத்துக்களைப் பேசினார். அவர் முஸ்லிம் இளைஞர். பேசியது திருத்தமான நல்ல தமிழ். ஆராய்ச்சி நிறைந்த கருத்துக்கள். இன்றுள்ள கல்வி முறையில் தெய்வ பக்தி வளர்வதற்கான வழியேயில்லை; என்று அவர் வருந்தினார்.

கடலூர் திரு தே. அ. சீனிவாசாசாரியர் ஒருவைணவ அன்பர்; திருமந்திரத்திற்கும், பகவத்கீதைக்கும், உள்ள புற ஒற்றுமைகளை எடுத்து விளக்கினர்.

கிறித்தவமும் இஸ்லாமும் வைணவமும் வாழ்த்தும் சமரச சைவமாகப் புதுவை மாநாடு பொலிந்தது.

கடல் கடந்து வந்து சைவ மக்கள் இம்மகாநாட்டில் பங்கு கொண்டது இம்மகா நாட்டிற்குப் பெரும் சிறப்பு. பண்பட்ட உள்ளமும் வாழ்க்கை முறையும் செயலும் அமைந்த திரு கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். அவர்களுடைய பேச்சும், உறுப்பினர் கூட்டத்தில் கூறிய கருத்துக்களும், சமாஜத்திற்குப் பெரும் பயன் அளிக்கும் என்பது உறுதி.

இங்கிருந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால்உள்ள பிஜித்தீவில் ஆசிரியப் பணியும் சைவப் பணியும் புரிந்து வருகின்ற திரு. பாலகணபதி அவர்கள் பிஜித்தீவில் இந்திய மக்களுடைய சமய நிலை குறித்துப் பேசியது சிறப்பானது. தங்களுக்கு என்ன வேண்டுமென்று அவர் சொன்னர். அங்குள்ள மக்களுக்கு, புத்தகம் வேண்டும்; திருவுருவங்கள் வேண்டும்; வாகனங்கள் வேண்டும் என்றெல்லாம் அவர்கள் சொன்னதைக் கேட்ட மெய்யன்பர்களில் சிலரேனும் அங்குள்ள நம் சகோதரர்களின் சமய உணர்வை வளர்ப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்வார்கள் என நாம் நம்புகிறோம்.

கொஞ்ச காலமாக சமாஜ வெளியீடுகள் வெளிவரவில்லை. பல்லாண்டுகட்குமுன் சமாஜம் இரண்டணு விலையில் பல்லாயிரக்கணக்கான திருவாசகப் பிரதிகளை அச்சிட்டு வெளியிட்டு விநியோகம் செய்தது. தொடர்ந்து திருமுறைகளும், சித்தாந்த சாத்திரங்களும், ஏனைய சில பெருநூல்களும் அடக்க விலையில் அச்சிட்டுத் தமிழுலகிற்குத் தந்தது. சமாஜப் பதிப்பு என்றல் பிழையில்லாத நம்பகமான, அதிகாரபூர்வமான பதிப்பு இதுவே என்று பண்டிதரும் பாமரரும் தமிழ் வழங்குமிடம் எங்கும் வழங்கி வந்தனர். இப்போது மீண்டும் திருவாசகம் நல்ல பதிப்பு வெளியிட சமாஜம் தீர்மானித்திருப்பது மகிழத்தக்க செய்தி.

இவ்விதச் சிறப்பு நிகழ்ச்சிகள் மூலம் புதுவை மகாநாடு சமாஜத்திற்கு ஒரு புதிய நல்ல திருப்பம்அளித்திருக்கிறது என்று நாம் கருதலாம்.

சமாஜ

# 58-ஆம் ஆண்டு விழா

[G. கலியாணம் M.A., Dip. Econ.,]

" ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. "

சைவத்திருநெறியைப் பரப்பிவரும் நமது சித்தாந்த மகாசமாஜத்தின் 58-ஆம் ஆண்டு நீறைவு விழாவும், அதன் அங்கமாகச் சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும் 27, 28, 29—12—63 வெள்ளி, சனி ஞாயிற்றுக்கிழமைகளில் வரலாற்றுப் புகழ்பெற்ற புதுச்சேரியில் ஸ்ரீ வேதபுரீசுவரர், ஸ்ரீ வரதராஜப் பெருமாள் நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்றன. விழாத் தொடங்குவதற்கு முன்னுளிவிருந்தே சமாஜ உறுப்பினர்களும், செயற்குழுவினரும் புதுவைக்கு வர ஆரம்பித்தார்கள்.

**முதல் நாள்:—**

27—12—63 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு புதுவை டெபுடி மேயர் திரு திருமுடி ந. சேதுராம செட்டியார் அவர்கள் இல்லத்திலிருந்து பாண்டு மேளவாத்தியங்கள் முழங்க, மாநாட்டுத் தலைவர்கள் மாநாட்டு மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பெற்றனர். முதலில் வேதபுரீசுவரர் கோயிலில் வழிபாடு நடைபெற்றது. பின்னர் நூல் நிலைய மண்டபத்தில் மாநாடு தொடங்கியது. தருமபுரம் சங்கீதபூஷணம் திரு, பி. சுவாமிநாதன் திருமுறைகளை இன்னிசையுடன் பாடினுர். கோவை இராவ்பகதூர் திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார். பி. ஏ., பி. எல்., அவர்கள் இடபக்கொடியை ஏற்றி வைத்தார்கள். சமய உலகிலும், அரசியல் உலகிலும் கொடிக்கு இருக்கும் பெருமையையும், உமாபதி சிவனுர் அருளிய "கொடிக்கவி"யின் சிறப்பையும்,இந்தியாவில் மதமாற்றம் செய்தவர்களைப்பற்றிய புள்ளி விவரங்களையும் விரிவாக எடுத்துக் கூறினுர். புதுவை திரு, செ. சென்னியப்ப முதலியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினுர்கள். புதுவை மாநில முதலமைச்சர் மேன்மைமிகு திரு. எத்வார் குபேர் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில் கடவுள் ஒருவனே யென்றும், அவன் முன்னிலையில் எல்

லாரும் சமம் என்றும், அன்பே சிவம் என்றும், சிவன் அழித்தற்கடவுள் என்பதுமக்களிடம் காணப்படும் கெட்டவற்றை யெல்லாம் அழிப்பவன் என்று பொருள்கொள்ள வேண்டும் என்றும், சைவர் மாநாடு நல்ல முறையில் நடைபெற இறைவன் திருவருள் செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். சென்னை தருமபுர ஆதீனப் பிரசார நிலையத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சமாஜ ஆண்டு விழாவும் மாநாடுகளும் இனிது நடைபெற ஆலவாய்ச் சொக்கர் அருள் பாலிக்க வேண்டுமென்று ஆசியுரை வழங்கினார்கள். சைவப் பெரியார் திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ. எல். டி. அவர்கள், திரு கோ. மு. முத்துசாமி பிள்ளை ஐ. ஏ. எஸ். (ஓய்வு) அவர்கள் எழுதிய "சிவலிங்க வழிபாடு" என்னும் நூலை சமாஜ வெளியீடாக வெளியிட்டார்கள். காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள், தருமபுரம், மதுரை, குன்றக்குடி, காஞ்சி ஞானப்பிரகாசர் மடம் முதலியவற்றின் ஆதீனத்தார்கள், முன்னாள் முதலமைச்சர் கு. காமராஜ், புதுவை மாநில ஆளுநர் திரு. சயாஜி இலட்சுமண சீலம், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், பர்மா கம்பை தனவைசிய கல்விச் சங்கச் செயலாளர் திரு சுப. க. அ. நா. நல்லப்ப செட்டியார், டாக்டர் டி.எம்.பி.மகாதேவன், இரங்கூன் காந்தி அண்ணாமலை, இராமநாதபுரம் பப்ளிக் பிராசிகியூடர் திரு. M. M. இராமலிங்கராஜ், கி. அ. பெ. விசுவநாதம், கீ. இராமலிங்கனார் முதலியவர்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளை திரு G. கலியாணம் வாசித்தார். காஞ்சிபுரம் ஸ்ரீ ஞானப் பிரகாச சுவாமிகள் ஆதீனகர்த்தர் அவர்களின் வாழ்த்துச் செய்தியுடன் அடுத்த சமாஜ விழாவைக் காஞ்சிபுரத்தில் நடத்தக் கூடுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். சமாஜச் செயலர் திரு. கொ. நீ. சிங்காரவேலு எம். ஏ., அவர்கள் ஆண்டு அறிக்கையைப் படித்தார்கள். பின்னர் மாநாட்டுத் தலைவர் மலேயா கோலாலம்பூர் திரு கா.இராமநாதன் பி.ஏ.,பி.எல். அவர்கள் தம்முடைய தலைமைப் பேருரையை ஆற்றினார்கள். கடவுள் வாழ்த்துடன் காலைக் கூட்டம் இனிது முடிந்தது.

அன்று பிற்பகல் 4-மணிக்கு மாநாடு மறுபடியும் தொடங்கியது. திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை ஐ.ஏ. எஸ் (ஓய்வு) அவர்கள் தாம் இயற்றிய "சிவலிங்க வழிபாடு" என்ற நூலினின்றும் சில பகுதிகளை யெடுத்து விளக்கிக்

கூறினார்கள். "திருக்கோயில்" இதழாசிரியர் திரு. ந. ரா. முருகவேள் எம்.ஏ., எம். ஓ. எல், திருவாவடுதுறை ஆதீன வித்துவான் திரு. தே. ஆ. சீனிவாசாசாரியார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வித்துவான் திரு.க. வெள்ளைவாரணனார் இம் மூவரும் முறையே "அருள்நந்தி சிவம்", "திருமந்திரம்", "திருவருட்பயன்" என்னும் பொருள்கள் பற்றிச் சொற் பொழிவு செய்தார்கள். தலைவர் அவர்களுடைய கருத்து ரையுடன் இரவு 8–30க்கு முதல்நாள் நிகழ்ச்சிகள் முடி வடைந்தன.

**இரண்டாம் நாள்:—**

*28—12—63* சனிக்கிழமை காலை 8–மணிக்குச் சைவ மங்கையர் மாநாடு கூடிற்று. மதுரை திருமதி மீனாட்சி நல்ல கிருஷ்ண அம்மையார் அவர்கள் தலைமை வகித்துத் தலை மைப் பேருரையை நிகழ்த்தினார்கள். பின்னர், திருமதிகள் புனிதவதி இளங்கோவன் (சென்னை), எஸ். நாமகிரி அம்மாள் (உடுமலைப்பேட்டை), ஜெயலட்சுமிஅம்மையார் (காட்டரண் பாக்கம்) இம்மூவரும் முறையே, "சைவ சமயமும் பெண் களும்", "அருளம்மை", "திருஅரசிலிப் பெருமை" என் னும் பொருள்கள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். தலைமை வகித்த அம்மையார் தாம் அமெரிக்க நாட்டில் 6, 7 ஆண்டுகள் இருந்த போதுகண்ட குழந்தை வளர்ப்பு, பெண்கள் சமயத் தொண்டு, மாதர் சங்கங்களின் பணி, சிறுவர் சிறுமியர்க்குச்சமயக் கல்வி புகட்டும் முறை இவற் றைப் பற்றி மிக விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். அன்றைய காலைக் கூட்டம் முடிந்தது. அப்போதே காட் டரண்பாக்கம் திருமதி ஜெயலட்சுமி அம்மையார் ஐம்பது ரூபாய் கொடுத்து சமாஜத்தின் ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்தார்கள்.

பிற்பகல் 2–மணிக்கு சமாஜ உறுப்பினர் கூட்டம் நடந்தது. 1965 ஆம் ஆண்டில் சமாஜ வைரமணி (60 ஆண்டு நிறைவு) விழா பற்றியும், திரு. ஜே. எம். நல்ல சாமிப் பிள்ளையவர்களின் நூற்றாண்டு விழா, சமாஜக் கூட்டம் ஏற்பாடு, உறுப்பினர் தொகையை அதிகப்படுத் தல் முதலியவை பற்றியும் ஆலோசிக்கப் பெற்றது. திரு வாளர்கள் ச சச்சிதானந்தம் பிள்ளை, சி. எம். இராமச் சந்திரஞ் செட்டியார், வா. தி. மாசிலாமணி முதலியார், கா. இராமநாதன் செட்டியார், மு. அருணாசலம், தி. கி. நாராயணசாமி நாயுடு, ரா. சண்முக சுந்தரஞ் செட்டி

யார் முதலியவர்கள் தங்கள் ஆலோசனைகளைச் சொன்னார்கள். மணிவிழா மலர் வெளியிடல், திருமுறைகள் சாத்திரங்கள் அச்சிட்டு வெளியிடல், சைவ சமய நூல்கள் அட்டவணை தொகுத்தல் முதலியவை பற்றிய தீர்மானங்கள் பேசப்பெற்றன. சமாஜத் தலைவர் உள்ளிட்ட 22 உறுப்பினர்கள் தாங்கள், 4 ஆயுள் உறுப்பினர்களையும், 1964 ஆண்டுக்கு உறுப்பினர்களையும் சேர்த்துத் தருவதாகவாக் குறுதியளித்தார்கள்.

பின்னர் 4-மணிக்குச் சைவர் மாநாடு தொடங்கிற்று. திருவாளர் ரா. சண்முக சுந்தரஞ் செட்டியார் (திருவதிகை), ப. சொக்கலிங்கம் செட்டியார் (கோவை), முரு. பழ. இரத்தினம்செட்டியார் (புதுக்கோட்டை), வித்துவான் சு. குமாரசாமி செட்டியார் (புதுவை), க. வச்சிரவேல் முதலியார் பி.ஏ., எல், டி. இந்த ஐவரும் முறையே "குணக்கும் குடக்கும்", "சைவமும் சன்மார்க்கமும்", "பதி இலக்கணம்", "திருக்கோவையாரும் பேராசிரியரும்", "உந்தியும் கனிறும்" என்னும் பொருள்கள் பற்றி விரிவுரை ஆற்றினார்கள். தலைவரவர்களின் கருத்துரைக்குப்பின் கடவுள் வாழ்த்துடன் இரவு 9-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது. அதே மண்டடபத்தில் இரவு 10மணிக்கு சமாஜஉறுப்பினர் கூட்டம்தொடங்கி 12மணிவரையில் நடந்தது. சைவ சமய முன்னேற்றத்திற்கான வழிவகைகளைப் பற்றி ஆலோசனைகள் நடைபெற்றன. ஸ்ரீ வில்லிபுத்தூர் வித்துவான் திரு. பெ. கோவிந்த மூப்பனார் திருமுறைகள், சாத்திரங்கள் இவைகளை சமாஜம் வெளியிட ரூ. 5,000 (ஐந்தாயிரம் வெண்பொற்காசுகள்) அளிப்பதாக வாக்குறுதி கொடுத்தார். காரைக்குடி முத்துப்பட்டணம் திரு. சொ. நாராயணன் செட்டியாரும் "திருவாசகம்" சமாஜத்தால் வெளியிடுவதற்காக ரூ 5,000 (ஐயாயிரம் வெண்பொற்காசுகள்) முன் பணமாகக் கொடுப்பதாக வாக்களித்தார்கள். இவ்விருபெரியார்களுக்கும் சமாஜமும் சைவ உலகமும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையன,

**மூன்றும் நாள்:—**

29—12—63 சனிக்கிழமை காலை 8 மணிக்குச் சைவ இளைஞர்மாநாடு தொடங்கிற்று. மேலையூர் சிவராஜயோக மடம் தவத்திரு மாணிக்கவாசக ஞான தேசிக சுவாமிகள் தங்கள் தலைமைப் பேருரையை நிகழ்த்தினார்கள். திருவாளர்கள்: வித்துவான் சி. குமரேசப்பிள்ளை (கன்னியாகுமரி),

சு. சுவர்ணகாளீச்சுவரன் (திருவையாறு), வித்துவான் வை. மாணிக்கசாமி (புதுவை), ஆ. சுவாமிநாதன் (மஞ்சக் கொல்லை), முகம்மது ஆரிபு எம். ஏ., பி. எட் (புதுவை), ஆகிய ஐவரும் முறையே, "சைவ சமய மாண்பு", "திருவாசகம் பேசும் திருத்தொண்டர்கள்", "அழுதடியடைந்த அன்பன்" "தாண்டக வேந்தரின் தண்டமிழ்", "சமயமும் கல்வித் திட்டமும்" என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பெருக்காற்றினார்கள். தலைவர் அவர்களின் அரிய கருத்துரையுடன் காலைக் கூட்டம் இனிது நிறைவேறியது.

பிற்பகல் 2 மணிக்கு சமாஜ உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சமாஜ அலுவலர் தேர்தல், தீர்மானங்களை அங்கீகரித்தல் முதலியவை நிகழ்ந்தன. மாலை 4 மணிக்குச் சைவர் மாநாடு கூடியது. திருவாளர்கள் ம. ரா. பாலகணபதி பி ஏ. எல். டி., (பிஜீத்தீவு), மு. அருணாசலம் எம். ஏ., (திருச்சிற்றம்பலம்), வித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார் (தருமபுரம்), புலவர் அ. நடேச முதலியார் (அண்ணாமலை நகர்) முதலிய நால்வரும் முறையே, ",பிஜித்தீவில் சமயநிலை", "தலவழிபாடு –சில சிந்தனைகள்", "கீதம் வந்த வாய்மை", "சைவ சமயக் கண்கள்" என்னும்பொருள்களைப் பற்றிச் சொற்பொழிவு செய்தார்கள். மாநாட்டுத் தலைவரவர்கள் சீரிய கருத்துக்கள் நிறைந்த தங்களுடைய முடிப்புரையை நிகழ்த்தினார்கள். சமாஜச் செயலர் திரு. கொ. நீ. சிங்காரவேலு எம். ஏ., அவர்கள் மாநாட்டுத் தலைவர்கள், சொற்பொழிவாளர்கள், வரவேற்புக் குழுவினர் முதலிய அனைவருக்கும் தனித் தனியே நன்றியுரை பகர்ந்தார்கள். வரவேற்புக் கழகத்தின் சார்பில் திரு. திருமுடி சேதுராம செட்டியார் அவர்கள் நன்றி கூறினார்கள். கடவுள் வாழ்த்துடன் இரவு 10 மணிக்கு மாநாடு இனிது முடிந்தது. மூன்று நாட்களிலும் சொற்பொழிவுகளுக்கிடையே தருமபுரம் திரு. சுவாமிநாதன், குமாரி கௌரி இவ்விருவரும் திருமுறைகள் பாடிக் கூட்டத்தினரை ஆனந்தபரவசமுறச் செய்தார்கள்.

மாநாடு நல்லமுறையில் நடைபெறுவதற்காக வரவேற்புக் கழகத்தினர் செய்திருந்த சிறந்த ஏற்பாடுகளைப் பாராட்ட வேண்டும். திரு. அ. சேனாபதிமுதலியார் அவர்கள் சேனாபதியாகவே திகழ்ந்தார்கள். இருந்த இடத்திலிருந்தே அவருடன் உழைத்த தளபதிகள், வீரர்கள் முதலிய

வர்களிடம் அவர் பணிகொண்டது மறக்க முடியாத தொன்று "அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே" என்ற குறிக்கோளுடைய பெரியார் அவர். வெளியூர் அன்பர்கள் தங்குவதற்காக டெபுடி மேயர் திரு. திருமுடி ந. சேதுராம செட்டியார் திரு. V. K. பழனிச்சாமி முதலி யார் இவர்களின் இல்லங்கள், வைசியாள் தெரு கலியாண வீடு, பெருமாள் கோயில் தெருவில் ஒருவீடு, செ. சென்னி யப்ப முதலியார் இல்லம், பாரதி ஆலை விடுதி இவ்விடங் களில் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப் பெற்றிருந் தன. இவ்விடங்களுக்குப் போகவரவும் கார் வசதிகளும் செய்யப்பெற்றிருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக வெளியூர் அன்பர்களுக்கு உணவு அளிப்பதற்காகச் செய் திருந்த ஏற்பாடுகள் மிகவும் போற்றத்தக்கன. அம்பலத் தாடியார் தெருவிலுள்ள திருமண வீட்டில் அனைவர்க்கும் அமுதுபடைக்கப்பெற்றது. 'செவிக்குணவில்லாதபோழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்' என்பது திருவள்ளுவ னார்வாக்கு. மாநாட்டில் செவிக்குணவு நிறையக் கிடைத் தது, அதனுடன், உண்டி நாலுவிதத்தில் ஆறுசுவைத் திறத்தினில் அன்பர்கள் மகிழ அமுதளித்த பான்மை தனிச் சிறப்பு வாய்ந்தது. அன்புடன் வரவேற்று, இன் சொல்பகர்ந்து, விருந்தளித்த வரவேற்புக் கழகத்தினர்க்கு வெளியூர் அன்பர்களின் நன்றி என்றும் உரியது. விழாத் தலைவர் தாம் தங்கியிருந்த இடத்தில் தினமும் காலை 5–45 மணிக்குக்கூட்டுவழிபாடு நடத்தினார்கள். பலர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

மூன்று நாட்களிலும் வாய்ப்பும், காலமும் நேர்ந்த போது அன்பர்கள் புதுவைக்கு அண்மையிலுள்ள திரு அரசிலி முதலியதலங்கள், அரிக்கமேடு முதலிய புதை பொருளிடங்கள், அரவிந்தர் ஆசிரமம், பிரஞ்சு–இந்திய ஆராய்ச்சி நிலையம் முதலியவற்றைப் போய்ப்பார்த்து இன்புற்றனர்.

சமாஜ ஆண்டு விழாவையும், அதையொட்டிய மா நாடுகளையும் சிறந்த முறையில் தங்கள் சொந்தச் செல வில் நடத்தித்தந்த வரவேற்புக் குழுவினருக்குச் சமாஜம் என்றும் கடப்பாடுடையது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல் லாம்"

குறிப்பு :—

மாநாட்டுத் தலைமையுரைகள் தொடர்ந்து அடுத்து வரும் இதழ்களில் இடம்பெறும் என்பதை உறுப்பினர்களுக்கு அறிவித்துக் கொள்கின்றோம்.

## மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள்

மேற்படி மாநாட்டில் 29—12—63 பிற்பகல் நடந்த பொதுக்குழுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றன:—

1. இந்து சமயத்தை அரசாங்கத்தின் சமயமாக அமைத்துக் கொண்டதற்காக நேபாள அரசாங்கத்தை சமாஜம் பாராட்டுகிறது.

2. சைவ சித்தாந்தத்தைப் பற்றிய நூல்களின் அட்டவணை (Bibliography) ஒன்று வெளியிடுவது என்று தீர்மானிக்கிறது. இதற்கு மேற்கொண்டு நடவடிக்கையெடுக்கக் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் சேர்ந்தவொருகுழுவை நியமிக்கிறது:—

1. திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு
2. ,, மு. அருணசலம் எம். ஏ.,
3. ,, டாக்டர். வி. ஏ. தேவசேனபதி எம். ஏ., பி. எச்டி.,
4. ,, சி. இராமலிங்கம் (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)
5. ,, ந. ரா. முருகவேள் எம். ஏ,, எம். ஓ. எல்,

இக்குழுவுக்கு திரு தி.கி. நாராயணசாமி நாயுடு அவர்களைக் கூட்டுநராக நியமிக்கின்றது.

3. சைவ சித்தாந்தத்தைப் பற்றிய ஒரு கலைக் களஞ்சியம் (Encyclopaedia) வெளியிடுவது என்று தீர்மானிக்கிறது. சமாஜச் செயற்குழு இதைப் பற்றி மேலும் ஆராய்ந்து திட்டம் தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

4. வெளிநாட்டு சைவ மக்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளவும், பர்மாவில் ஒரு சைவ சித்தாந்த மாநாடு நடத்தவும் ஆவன செய்யப் பின் குறித்த உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமிக்கிறது:—

1. திரு. இராவ்சாகிப் நல். முருகேச முதலியார், பி. எ.
2. திரு. கா. இராமநாதன் செட்டியார் பி.எ. பி. எல்.
3. திரு. எஸ். நாராயண செட்டியார் (முத்துப் பட்டிணம், காரைக்குடி)

இக்குழுவுக்கு திரு. நல். முருகேச முதலியார் அவர்களை அவை கூட்டுநராக நியமிக்கிறது.

5. இந்தியாவிலுள்ள எல்லாச் சைவ சமைய அமைப்புகளுடனும் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அதற்கு ஆவன செய்யப் பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய குழுவை நியமிக்கிறது:—

1, திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை I.A.S. (Retd)
2. ,, ச. சச்சிதானந்தம் பிள்ளை B.A., L.T.,
3. ,, ந. ரா. முருகவேள் M.A., M.O.L,
4. ,, தி. கி, நாராயணசாமி நாயுடு
5. ,, ஜி. கலியாணம் பிள்ளை M.A.,

இக்குழுவுக்கு ந. ரா முருகவேள் அவர்களை அவை கூட்டுநராக நியமிக்கிறது.

6. சைவ தீக்கை செய்யத் தகுதியுள்ள பெரியார்களைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய ஒருகுழுவை நியமிக்கிறது:–

1. திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை I. A. S. (Retd)
2. ,, ச. சச்சிதாநந்தம் பிள்ளை B.A , L.T.,
3. ,, சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் B.A., B.L.,
4. ,, எஸ். சோமசுந்தரஞ் செட்டியார் M. A.
5. ,, தி. கி. நாராயணசாமி நாயுடு

இக்குழுவுக்கு திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை அவர் களை அவை கூட்டுநராக நியமிக்கிறது.

7. சமாஜத்தின் மணிவிழாவின் போது ஒரு நினைவு மலர் (Souvenir) வெளியிடுவது என்று தீர்மானிக்கிறது.

இம்மலரில் பின்குறிப்பிட்ட பொருள்கள் அடங்கி யிருக்கும்:–

1. இந்தியாவிலுள்ள சைவ நிலையங்களின் அட்டவணையும் வரலாறும்.
2. சமாஜத்தோடு தொடர்புகொண்டவர்களின் வரலாறும் அட்டவணையும்.
3. சைவத் தலைவர்களைப் பற்றிய செய்திகளும் சிறப்புகளும்.
4. சமாஜத் தொடர்புள்ள மற்றைய பொருள் கள்.

8. திரு. ஜெ. எம். நல்லசாமி பிள்ளையவர்களின் நூற்றாண்டு விழாவிற்காகக் தனி 'சித்தாந்த' இதழ் ஒன்று வெளியிடுவது என்று தீர்மானிக்கிறது.

9. காரைக்குடி திரு. சொ. நாராயண செட்டியார் நல்ல திருவாசகப் பதிப்பு வெளியிடுவதற்காக சமாஜத் திற்கு ரூ.5000 வழங்துவதாக உறுதிகூற, இதை சமாஜம் நன்றியுடன் ஏற்றுக் கொண்டு ஆவன செய்யப்பின் வரும் உறுப்பினர்கள் அடங்கிய குழுவை நியமிக்கிறது:–

1. திரு. மு. அருணசலம் M. A.,
2. திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு
3. திரு. ந. ரா. முருகவேள் M,A., M.o.L..

இக்குழுவிற்கு திரு. மு. அருணசலம் அவர்களை அவை கூட்டுநராக நியமிக்கிறது.

10. இராஜபாளையம் திரு. பெ. கோவிந்த மூப்பனர் தேவாரப் பதிப்பை வெளியிடுவதற்காக ரூ. 5000 சமாஜத் திற்கு வழங்க முன்வந்து விபரங்களைப் பின்னல்தெரிவிப்ப தாகக்கூற, பொதுவாக இக்கொடையை சமாஜம்வரவேற் கிறது.

11. இனி செலுத்தப்பெறும் ஆயுள் சந்தாத்தொகை களைத் தனியாக வங்கியில் தவணை வைப்புத்தொகையாக

வைப்பது என்று தீர்மானிக்கிறது. இதுவரையில் செலுத்திய ஆயுள் சந்தாத் தொகைகளில் ஒரு நபருக்கு ரூ. 25 வீதம் கணக்கு செய்து அத்தொகையை வங்கியில் தவணை வைப்புத் தொகையாக வைப்பது என்றும் தீர்மானிக்கிறது.

12. நூல்கள் விற்ற தொகையைத் தனியாகக்கணக்கு வைப்பது என்று தீர்மானிக்கிறது.

13. இனி கூட்டும் ஆண்டு விழாக்களில் பொதுக் குழுக் கூட்டத்திற்கென்றே ஒரு முற்பகற் பொழுது ஒதுக்குவது என்று தீர்மானிக்கிறது.

செயலாளர்.

## சமாஜச் செய்திகள்

புதுவையில் நடந்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 58 ஆம் ஆண்டு நிறைவு விழாவில், தலைவர் ஒவ்வொரு உறுப்பினரும் பத்து உறுப்பினர்களைச் சேர்த்துக்கொடுக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு அப்படிச் சேர்த்துக் கொடுப்பதாக உறுதி கூறுபவர்கள் தங்கள் பெயர்களைச் செயலாளரிடம் தெரிவிக்கும்படியாகவும் கேட்டுக் கொண்டார். அவ்வேண்டுகோளுக்கிணங்க, பின் குறிப்பிட்டவர்கள் 10 பேர்களை உறுப்பினர்களாக்கிச் சந்தாவும் கொடுத்துவிட்டனர்:—

1. திரு. K. இராசு முதலியார் கிராம சேவகர்.
2. திரு. திருமுடி ந. சேதுராம செட்டியார், புதுவை.
3. திரு. கொ. நீ. சிங்காரவேலு

பின் குறிப்பிட்டவர்கள் பத்து உறுப்பினர்களைச் சேர்த்துக் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்துள்ளனர்:—

1. திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை (இவர் 25 உறுப்பினர்களைச் சேர்த்துக் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்துள்ளனர்.)

2. திரு. சிவானந்த பொன்னையா, மலேயா, (இவர் ஆயுள் சந்தா ஒன்றையும் சேர்த்துக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்.)

3. திரு. குணரத்தினம், மலேயா, ,,
4. ,, மு. அருணாசலம், திருச்சிற்றம்பலம் ,,

5. ,, சொ. நாராயணன், காரைக்குடி
6. ,, வி. ஆறுமுக முதலியார், சென்னை
7. ,, ந. ரா. முருகவேள் ,,
8. ,, சி. குமரேசப் பிள்ளை, கன்யாகுமரி
9. ,, ஜி. வடிவேலாயுதம், தாம்பரம்
10. ,, இளங்கோவன், சென்னை
11. ,, திருத்துறையூர் ஆறுமுக நயினர்
12. ,, பெருமாள்சாமிப் பிள்ளை, பழநி
13. ,, ச. சச்சிதாநந்தம் பிள்ளை
14. ,, W. K. திருவேங்கடம், சென்னை
15. ,, W. T. மாசிலாமணி முதலியார்
16. ,, N.R.M. இராமசாமி செட்டியார், ஆத்தங்குடி
17. ,, R. திருநாவுக்கரசு, கும்பகோணம்
18. ,, திருஞானசம்பந்த முதலியார், காஞ்சிபுரம்

மேற்குறித்தவர்கள் பத்து உறுப்பினர்களின் சந்தாத் தொகைகளை விரைவில் அனுப்பும் படியாக வேண்டப்படுகின்றார்கள்.

ஆயுள் உறுப்பினர்களின் பட்டியல் நவம்பர் சித்தாந்தத்தோடு அனுப்பினோம். அதற்குப்பின் ஆயுள் உறுப்பினர்களானவர்களின் பட்டியல் பின் தரப்பட்டிருக்கிறது.

1. திருமதி. காட்டரண்பாக்கம் ஜெயலட்சுமி அம்மையார்.

2. திரு. இராஜு முதலியார், கைவண்டூர்

3. திருமதி. ர. ம. அன்னபூரணி ஆச்சியம்மா, மகிபாலன்பட்டி.

4. பேராசிரியர் பாஸ்கரன் அவர்கள், புதுவை.

செயலாளர்.

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு

1964 ஆம் ஆண்டுக்குரிய சந்தாவினை இதுகாறும் அனுப்பாதவர்கள் ஜனவரி மாதத்திற்குள்ளாவது அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். இல்லையேல் பிப்பிரவரிமாத இதழ் வி. பி. பி. மூலம் அனுப்ப நேரும். இதனால் அதிகச் செலவு ஏற்பட ஏதுவாகும். அங்ஙிலை

ஏற்படாதவாறு சமயப்பணிக்கு உறுப்பினர்களின் ஒத்துழைப்பினை வேண்டுகிறோம். பணம் அனுப்ப வேண்டிய முகவரி:— செயலாளர்,

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கீழமாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

மலாய் நாட்டில் உள்ள சமாஜ உறுப்பினர்கள் தங்களுடைய சந்தாக்களை திரு. கே. இராமநாதஞ் செட்டியார் பி.எ., பி.எல். அவர்களிடத்துச் செலுத்தி விடலாம். மலாய் நாட்டு அன்பர்களுக்கு ஆண்டு உறுப்பினர் கட்டணம் ரூ. 4 00 ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூ. 75 00 உள்ளூர், சிலோன் உறுப்பினர்களுக்கு ஆண்டு உறுப்பினர் கட்டணம் ரூ. 3 00, ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூ. 50.00 சென்ற ஆண்டு உறுப்பினர் கட்டணத்தை அனுப்பாத ஈழநாட்டுறுப்பினர்களுக்குச் 'சித்தாந்தம்' அனுப்ப இயலாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். —செயலாளர்.

26—1—64 ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் சமாஜ அலுவலகத்தில் நிகழும். உறுப்பினர்கள் யாவரும் வந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

## தைமாத விசேட தினங்கள்

| | | |
|---|---|---|
| 5 | (18—1—64) | அப்பூதியடிகள் நாயனார் விழா |
| 8 | (21—1—64) | கலிக்கம்ப நாயனார் விழா |
| 12 | (25—1—64) | கண்ணப்ப நாயனார் விழா |
| 13 | (26—1—64) | அரிவாட்டாய நாயனார் விழா |
| 15 | (28—1—64) | ஞானியார் சுவாமிகள் விழா |
| ,, | ,, | தைப்பூச விழா |
| 19 | ( 1—2—64) | சண்டேசுர நாயனார் விழா |
| ,, | ,, | திலகவதியார் விழா |
| 23 | ( 5—2—64) | திருநீலகண்ட நாயனார் விழா |

## பெரிய புராணச் சொற்பொழிவுகள்

நமது சமாஜ அன்பர் திரு. G. கலியாணம் M.A., Dip. Econ., அவர்கள் மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசர் கோயிலிலுள்ள திருவள்ளுவர் கழகத்தில் ஆங்கில மாதம் கடைசி

இரண்டு ஞாயிற்றுக் கிழமைகளில் பெரியபுராணத்தை முறை யாகச் சொற்பொழிவு செய்து வருகிறார்கள். இதுவரை ஐந்து சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. 19-1-64, 26-1-64 இவ்விரு நாட்களிலும் "இயற்பகையார் — இளசைமாறர்" "மெய்ப்பொருளார் - விறன்மிண்டர்" என்பன பற்றிப் பேசுவார்கள்.

திருச்சிற்றம்பலம் காந்தி வித்தியாலயத்தார் பந்தனை நல்லூர் பசுபதீஸ்வரர் ஆலயத்தில் செய்து வருகின்ற பிர தோஷமாதவழி பாட்டின் ஐந்தாம் ஆண்டு விழா திரு. சரம கோபாலன் அவர்கள் தலைமையில் 28—12—63 இல் நடை பெற்றது. குடந்தை பஞ்சாபகேச சாஸ்திரிகள் பிரதோஷ வழிபாடு பற்றிச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள். தேவாரப் பாடல் போட்டி நடைபெற்றது. காந்தி வித்தி யாலய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, உமா பெண்கள் உயர் நிலைப்பள்ளி ஆதாரப் பள்ளிகள், சீர்திருத்தப் பள்ளி, ஆகிய வற்றின் பிள்ளைகளும் பெண்களும் கலந்து கொண்டனர்.

---

## மதிப்புரை

"இறைவனின் உறைவிடங்கள்" (படங்களுடன்) இயற்றி யவர் காளத்தி நடேச முதலியார், திருவல்லிக்கேணி லாயல் அச்சகம் பதிப்புப் விலை ரூ 3.

இது திரு. காளத்தி நடேச முதலியார் தாம் முதலில் 1953ல் வெளியிட்ட நூலின் மூன்றும் பதிப்பாகும். இப்பதிப் பில் சில புதிய குறிப்புகளும், தற்போது கிடைக்கக் கூடிய ரயில், பஸ் முதலிய வசதிகளைப்பற்றிய புதிய தகவல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. பாடல் பெற்ற சிவத்தலங்களும், முருக வேளின் படைவீடுகளும் சிவவைணவ தலங்களும் இந்நூலில் குறிக்கப்பட்டுள்ளன. தலங்களின் மகிமை, சுவாமி அம்மன் பெயர்கள், யாத்திரை மார்க்கங்கள், வழிபட்ட பெரியார் களின் பெயர், மூர்த்தி, தல, தீர்த்த விசேஷங்கள் முதலிய வைகள் மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. சுமார் 300 தலங்களின் குறிப்புகள் அடங்கியுள்ளன. சில தலங்களுக்குப் புகைப்படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. டூரிஸ்ட் பஸ் வசதி கள் கிடைப்பதால் பல சபைகள் தலவழிபாட்டு யாத்திரை களை மேற்கொள்ளும் இக்காலத்தில், இந்தக் கையடக்கமான வழிகாட்டி மிக்க பயனுடையதாக இருக்கும். —நல். மு.

உ

சிவமயம்

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

## 58-ஆம் ஆண்டு நிறைவு விழா, புதுவை

## (27—12—63)

# கொடியேற்றம்

[இராவ்பகதூர் - சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார்]

சைவசித்தாந்த மகா சமாசத்தின் ஆண்டுவிழாப்பேரவையில் கொடியேற்றிவைக்கும் அருட்பணியை அடியேனுக்குச் சமாசத்தார் தந்த கருணைக்கு உள்ளங் கலந்த நன்றியைத் தெரியப்படுத்துகிறேன். ஒரு நற்செயல் தொடங்கி வைப்பதற்கும் அதனை வெற்றியுடன் முடித்து வைப்பதற்கும் அதற்கேற்ற கொடியைக் கட்டி ஏற்றி அதனைத் தம் குறிக்கோளாகக் கொண்டு வழங்குவது உலகில் எல்லா நாடுகளிலும் எல்லாச் சமயத்தார்களிலும் எல்லா மொழியாளர்களிலும் ஏற்பட்டிருக்கும் ஒரு பண்டைய வழக்கம். நமது பாரதத்திலும் சிறப்பாகத் தமிழ் நாட்டிலும் ஒவ்வொரு செயலிலும் இது விளக்கமாகப் பங்கு கொண்டுள்ளது. அரசியலிலும், வாணிபத்திலும் போர் முறைகளிலும் கொடியேற்றம் ஒரு சிறந்த செயலாக இருந்த போதிலும் அறச் செயல்களிலும் சமயச் செயல்களிலும் மிகச் சிறந்து விளங்குகின்றது.

உலகியல் விழாக்களில் கொடியேற்றம் ஒரு சிறந்த நிகழ்ச்சியாக இருந்தபோதிலும் சமய விழாக்களாகிய கோயில் விழாக்களிலே அது இன்றியமையாத ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. சமயத் திருக் கூட்டங்களிலும் கொடியேற்றம் இல்லாமல் எதுவும் தொடங்குவதில்லை. நமது தற்கால அரசாங்கம் சமயச் சார்பற்றது என்று வெளிப்படையாகக் கூறிக்கொண்டபோதும் அதன் கொடியாகிய மூவண்ணக் கொடி, சமயச் சார்புள்ளதாகக் கலைமகள் அலைமகள் மலைமகள் என்ற முத்தேவியரின் வண்ணங்களாக வெண்மையாகிய தூய்மை, சிவப்பாகிய பொருண்மை, கருநிறமாகிய ஆற்றன்மை என்ற பண்பு கொண்டுள்ளது. அதுபோன்ற நமது சைவ சமயக் கொடியாகிய வெள்ளேறும் தூய்மை, பொருண்மை, ஆற்றன்மை என்ற பண்புகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது. அக்கொடியை ஏற்றி அதனையே நம் குறிக்கோளாகக் கொண்டு வழிபடுவோமாக.

மற்ற எந்தச் சமயத்திலும் கண்டிராத ஒரு பெருமை சைவ இலக்கியத்திற்கு உண்டு. அது சமயக் கொடியைப் பற்றியது. இன்றைக்கு 750 ஆண்டுகளின் முன் சைவ இராசதானியாகிய தில்லைச்சிற்றம்பலத்தில் சந்தாஞசிரியராய் விளங்கி மெய்கண்ட சாஸ்திரங்களில் எட்டு அரிய நூல்களை அருளிச் செய்த கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள், சமய சம்பந்தமாகக் கொடி கட்டும் திருச்செயலை நான்கு பெருமை பொருந்திய பாசுரங்களில் அருளிச் செய்திருக்கின்றார். அது மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றாகிய கொடிக்கவி என்ற அற்புத நூல் ஆகும். சித்தாந்த பரமாக முதல் முதலில் எழுந்த கொடியேற்ற நூல் அதுவாகும். சைவ சித்தாந்தக் கருத்துக்களை வெகு நுட்பமாகத் தன்னுள் அடக்கிக்கொண்டு கொடிகட்டும் குறிக்கோளை அது விளக்குகிறது. அவ்வடியார் ஏற்றி வைத்த சைவக்கொடி

இன்றைக்கும் நமது நாட்டில் ஓங்கி விளங்கிக்கொண் டிருக்கிறது.

அந்நூலில் முதற்பாசுரத்தில் தானே கொடி கட்டின தாகவும் அதனை எதன்பொருட்டுக் கட்டினேனென்றும் கூறுகிறார்.

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேஇடம் ஒன்று மேலிடில் ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள்அடராது உள்உயிர்க்கு உயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனும் திரிமலத்தே
குளிக்கும் உயிர் அருள் கூடும்படிக் கொடிகட்டினனே"

என்பது அப்பாசுரம். இதில் ஒளி – ஞானம், இருள் – ஆணவம். ஆணவத்திற்கும் ஞானத்திற்கும் இடம் ஒன்றே; ஞானம் மேலிட்ட காலத்து ஆணவம் ஒளித்து நிற்கும். ஆணவம் மேலிட்ட காலத்து ஞானம் ஒளித்து நிற்கும். ஒன்று மேலிட்ட காலத்திலே ஒன்று ஒளித்து நின்றாலும் ஞானத்தை ஆணவமலம் பொருந்தாது. பூர்வ வாசனையினால் சிவஞானம் சற்று விளங்குமானாலும் மும் மலங்களிலே மூழ்கிக் கிடக்குமே அல்லாமல் அது கொண்டே நீங்க மாட்டாது; இப்படி மும் மலங்களிலே மூழ்கிக் கிடக்கின்ற ஆன்மா, அருள் கூடும்படி தீக்கை யினால் மலங்களைப் போக்கக் கொடிகட்டினேன் என்பது கருத்துரை.

ஆணவத்துக்கும் ஞானத்துக்கும் இடம் ஒன்றா யிருக்கத் தனது காரணம் கெடாமல் இருக்கிற மலத் தைத் தீக்கையினால் போக்கி மோட்சத்தை அடைவிப் போம் என்பது நுட்ப உரை. ஆகவே ஆசிரியர் சீட னுக்கு உபதேசம் செய்து தீக்கை கொடுக்கும்போது வீடு பேற்றினை அருளுவதாகக் கொடிகட்டி நிற்கிறார்.

இனி இரண்டாம் பாசுரத்தில் ஆசிரியர் அழியாத பொருள் (கர்த்தா), சக்தி (பொது), ஆன்மா, அஞ்ஞான மாகிய கேவலமலம் இவைகள் எவை எவை என்று

விளக்கிக் கோபுரவாயிலில் கொடிகட்டி நிற்கிறார். மூன்றும் பாசுரத்தில், மனம், வாக்கு, காயம் இவைகளால் எக்காலமும் தாக்காதவன்; ஆன்மபோதத்தால் அறியப் படாதவன்; எவ்வாறு தீக்கையால் அறிவிக்கப்படுவன் எனக் கூறிக் கொடி கட்டுகிறார்.

நான்காம் பாசுரத்தில் ஐந்தெழுத்து முதலிய மந்திரங்களை உச்சரித்து அதன் சொரூபத்தை அறிந்து சக்தி சிவான்மீகமாகிய எழுத்தை நெஞ்சிடை வைத்தால் சத்தி சிவனை இரண்டறக் கலப்பிப்பன் என்று கூறி ஐந்தெழுத்தால் வீட்டை அடையும்படிச் செய்யக் கொடி கட்டினதாகக் கூறுகிறார்.

ஆகவே சைவ சமயக் கொடி கட்டின ஆசிரியர் சித்தாந்தப் பொருள்களின் முடிவான ஞானத்தை விரித்துக் கூறி அதனால் ஆன்மாக்கள் உய்யும் வழியைக் கற்பித்து உறுதியுடன் கோபுர வாசலில் கொடி கட்டுகிறார். அதனை முன்னிட்டு ஒவ்வொரு சமயத் திருக்கூட்டங்களிலும் நாமும் கொடியேற்றிக் கட்டும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறோம். ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அறிவுபெறும் வகையில் பற்பல சாதனங்களையும் நாம் கொள்ளவேண்டும். சிவனடியார்கள் அச்சாதனங்களைச் செய்து உலகத்திற்கு வழிகாட்டிகளா யிருக்கிறார்கள். சைவத்தைப் பரப்புவதற்கு அச்சாதனங்களே நமக்கு வழி காட்டுவன. நால்வர் சமயாசாரியர்கள் சென்றவழி, அறுபத்து மூவர் சிவனடியார்கள் காட்டிய வழி, திருமுறைகளை அருளிய ஏனையஅடியார்கள் வாழ்ந்தவழி, மற்றமெய்யடியார்கள் தோற்றிய வழி, இவைகளை நாம் கடைப்பிடிக்க முயலவேண்டும்.

பண்டைக் காலம் முதற்கொண்டே கோயில் வழிபாடு நமது நாட்டில் இருந்தபோதிலும், முறையாகப் பொதுமக்கள் கோயில் வழிபாடு செய்யவேண்டும் என்றும் கோயில்களில் கூட்டு வழிபாடு நடத்துவதற்கு இன்

னிசை அருட்பாக்கள் பாடவேண்டும் என்றும், நால்வர் சமயாசாரியர்கள் பல்லவர் காலம் முதற்கொண்டே ஏற் படுத்திச் சமயப்பரப்பு செய்தார்கள். தேவாராதிகள் ஓதப்பட்டன. மக்களுக்கு இறை வணக்கம் வற்புறுத்தப் பட்டது. திருமுறைகள் ஓதப்பட்டன. சோழர்களால் பெருங் கோயில்கள் கட்டப்பட்டுப் பெருந் திருவிழாக்கள் வகுக்கப்பட்டு அரசர்களால் அவைகள் ஆதரிக்கப் பட்டன. பிறகு மெய்கண்ட தேவர் முதலிய ஆசாரியர் கள் தோன்றித் தத்துவஞான நூல்களை வகுத்தார்கள். பொதுமக்கள் சமய ஞானம் பெறவே அன்னார் ஆன்மாக் கள் உய்வதற்கு வழிகள் கற்பிக்கப்பட்டன. அந்தக் காலம் முதற்கொண்டே சமயஞானம் ஊட்டப்பெற்று வழிபாடு ஒழுக்கம் முதலிய சீலங்கள் நாட்டில் தோன் றின. இந்த ஒழுக்க முறை தமிழர் தன்னுரிமை இழக்கும் நாள்வரை இருந்தது.

நாட்டில் தன்னுரிமை போய்ப் பிற மதங்கள் உள்ளே புகுந்து வரவே, மக்கள் சமயப் பயிற்சி இழந்தும் சமய ஞானம் போயும், வெறும் உலகாயதத்துள் சேர்ந்து சமய வழிபாட்டினைக் கைவிட்டார்கள். ஏனைய மதங்களாகிய இசுலாமும், விவிலியமும் இளைஞர்களையும் கல்லாதவர் களையும் தம் வயப்படுத்தின. ஆங்கிலர் ஆட்சிக்குப் பிறகு சமயச் சார்பற்ற ஆட்சிதோன்ற நாட்டில் பண் டைச் சமயங்களுக்கு யாதொரு ஒத்துழைப்பும் இல்லா மற் போய்விட்டது. அரசாங்கம் சமயச் சார்பு அற்ற தெனினும், நாட்டுச் சமய நிலையங்களுக்கு வரிவிடுத்தும் வெளிச் சமயங்களுக்கு வரியில்லாமலும் செய்துவர, நாட்டுச்சமயங்களின் வளர்ச்சி தடைப்படுகிறது. இதனால் அநீதி ஏற்பட்டு நாட்டுச் சமயங்களுக்குப் பெருங்கேடும் குறைவும் தோன்றுகின்றன. இந்த மாறுபாடு வெளிப் படையாகத் தென்படாவிட்டாலும் அரசியலார் வெளி யிட்டு இருக்கும் புள்ளிவிவரங்களால் தெரிகிறது.

## 1951 முதல் 1961 வரைக் காணும் சமய நிலவரம் அடியிற்காணும் மாறுதல் கொண்டுள்ளது

| சமயங்கள் | 1951 | 1961 | % | விவரம், காரணம் |
|---|---|---|---|---|
| 1. சமணம் | — | — | 20% | அதிகம் |
| 2. பௌத்தம் | 1·81 | 32·5 | 1671 | இந்துக்கள் புத்தமதப் பிரவேசம். |
| 3. கிருத்துவம் | 83·92 | 107·26 | | மத மாற்றப் பிரசாரம்-மலைச் சாதியரில் சேர்ப்பு. |
| 4. இசுலாம் | 364·14 | 469·39 | 25·61 | பாகிஸ்தானின் கள்ளக் குடியேற்றம். |
| 5. சீக்கியம் | | | 70% | அதிகம். |
| 6. இந்து | 3035·7 | 36650 | 2% | பிரசாரக் குறைவு – மதாபிமானக் குறைவு, மலைச் சாதியர் மத மாற்றம். |
| 6. பிற | — | — | —13% | குறைவு |

இந்தக் கணக்குகளை ஆராயும்போது பொதுவாக உள்ள மக்கட் பெருக்கத்தொகை கழிக்கவேண்டும். கிருத்துவம் செய்துவரும் பெரும் பிரச்சாரத்தினுல் மிக முன்னேறி யிருக்கிறது. இசுலாம் பாகிஸ்தானிகள் நுழைந்து வருவதினுல் அதிகமாகி யிருக்கிறது. பௌத்தர்கள் ஹரிஜனத் தலைவர்களுடைய போதனையினுல் பெருகி இருக்கிருர்கள். இந்து மதமோ பலவிதமான

தாக்குதல்களினல் மிகக் குறைந்து வருகிறது. இவ்வாறு குறைந்துகொண்டே போனல் சில பத்தாண்டுகளில் சிறுபான்மையராகி விடுவார்கள். இதனை அறிந்து தீவிரப் பிரசாரம் செய்யவேண்டாமா?

நமது சமயப் பிரசாரம் காலத்திற்குத் தக்கபடி மாறுதல் அடையவேண்டும். ஏனையோர்கள் செய்கிருற்போல சமயக் கல்வி நிலையங்கள் வைக்கவேண்டும். பகுத்தறிவு மீறி யிருக்கும் இளைஞர்களிலும் பெண்களிலும் "கோயில் செல்க" என்ற வெறும் கட்டளை பயனளிக்காது. சமய அறிவு புகட்டும் வார வழிபாட்டு நிலையங்கள் அமைத்துத் தீவிர போதனை தரவேண்டும். கல்விச்சாலைகளில் இறைவணக்கம், சமய அறிவுப் பாடம் ஏற்படுத்துவதோடு மருத்துவ உதவிச் சாலைகள், சமூக சேவைச் சாலைகள், உணவு விடுதிச் சாலைகள், சமய நூலகங்கள், சமயப் பரிசுகள், சமய நூற்பிரசுரங்கள், ஓவிய-சிற்ப விழாக்கள் முதலிய இயக்கங்கள் பரவவேண்டும். இளைஞர்களின் உள்ளங்களை நல்வழிப்படுத்துவதற்குத் தக்க போதனு முறைகளை இயக்கவேண்டும். இவைகளைத் தக்க குறிக்கோள்களாக அமைத்துக்கொண்டு பிரசாரம் செய்தால் அவைகளே சமயப்பணி ஆகி நன்மைகள் தரக்கூடும்.

நாட்டுச் சமுதாய இயக்கங்களைச் சிறிது ஆராய்ந்து பாருங்கள். சங்கத்தார் காலத்தில் புலவர் சங்கங்களும் சமூக விழாக்களும் இருந்தன. சோழ பாண்டிய காலங்களில் சமயச் சங்கங்களும், திருவிழாக்களும், சமயப் பாடல் ஓதும் இயக்கங்களும் இருந்தன. பிற ஆட்சியாளரின் அடிமைக் காலத்தில் தற்காப்புக்காகக் கொடிகூடங்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு சிற்றூரிலும் பயிற்சிச்சாலை கூத்துச்சாலை முதலியன இருந்தன. பிறகுபஜனைக்கூடம் ஏற்பட்டது; தெருக்கூத்தும் தோன்றியது. தற்காலப் படிப்பு ஏற இவற்றில் இளைஞர்களின்

ஆர்வம் குறைந்தது. ஏனைய சமயத்தார் போல சமய போதனைச் சாலைகள் ஏற்படுத்தல் வேண்டும். இராம கிருஷ்ண மிஷன்கள் செய்துவரும் சேவா நிலைய வேலைகள் ஏற்படல்வேண்டும். படித்தவர்களையும் செல்வர்களையும் இளைஞர்களையும் கவரக்கூடிய வழிபாட்டு நிலையங்கள் வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொன்று அமைக்கப்படல் வேண்டும். அதனால்தான் சமயத்தில் குறைவு நேராமல் பாதுகாக்க முடியும்.

உலகில் உள்ள எல்லாச் சமயக் கோட்பாடுகளையும் அறியவேண்டிய எண்ணத்தில் எல்லாச் சமய நூல்களையும் படித்திருக்கிறேன். இன்னும் படித்துக்கொண்டும் இருக்கிறேன். என் ஆராய்ச்சியின்படி நமது நாட்டுச் சமயங்களில் காணும் உண்மைகளும் தத்துவ ஞானமும், அன்பு நிலையும், கடவுட் கொள்கையும், மக்கள் ஈடேற்றமும் வேறெந்த வெளிச் சமயங்களிலும் இல்லை என்று அறிவேன். ஆராயாத குறையே நமது மக்களை வேறு சமயங்களுக்கு ஓட்டுகிறது. ஆராய வைக்காத குறையே நமது பழியாக நிற்கிறது. ஆகவே தவறுகளை நமது தலைகளில் ஏற்றிக்கொண்டு, இனிமேலாவது நன்னெறியில் பாடுபடுவோமாக. அதனையே நமது குறிக்கோளாகக் கொண்டு வழிபடுவோமாக. இந்தப்படி சமயப் பணி நாம் செய்து வெற்றியடைவோம் என்று கூறிச் சைவ சமயக் கொடியை ஏற்றுகிறேன். நமது முயற்சி வெல்க! சைவம் வெல்க! தமிழ் மொழி வாழ்க!

மங்கை அச்சகம், சென்னை-14

உ
சிவமயம்.

## திருச்சிற்றம்பலம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

புதுவை, ஸ்ரீவேதபுரீசுவரர் - ஸ்ரீ வரதராசப் பெருமாள் நூல் நிலையத்தில். நிகழும்சோபகிருதாண்டு மார்கழித் திங்கள் 12. 13. 14 (27-28,29-12-63) வெள்ளி, சனி ஞாயிறு ஆகிய மூன்று தினங்களில் சென்னை மாநிலச் சைவசித்தாந்த மகாசமாஜத்தினர் நடத்திய 58 ஆம் ஆண்டு நிறைவு விழாவின்போது, ஷை சமாஜத்தினர்க்கு ஷை நூல் நிலையத்தார் சார்பாகத் திரு. S. சென்னியப்ப முதலியார் அவர்களால் வாசித் தளித்த

# நல்வரவேற்பு

சிவ மணங் கமழும் தெய்வ நெறித் திருச்சபையின்

மெய்யன்பர்களே!

இன்று ஒரு பொன்னாளாகும். இன்றைய நன்னாளில் அன்பு கெழுமிய நல்லுள்ளமும், தெய்வத் தமிழ்வளர்க்கும் நன்னாவும், சிவத்தொண்டு புரியும் நற்செயலும் உடைய நன்மக்களாகிய உங்களைக் காணவும். உங்களோடு கலந்து பேசவும், நீங்கள் செய்யும் தொண்டில் பங்கு கொள்ளவும் ஓர் அரிய வாய்ப்பினை அளித்த திருவருளுக்கும், சமாஜத்தினராய உங்களுக்கும் முதன் முதலாக என் அன்பு கலந்த வணக்கம். எத்தனையோ துறைகளில் எப்படி எப்படியோ அலுவல்களைச் செய்துவரும் தாங்க

ளனைவரும் தெய்வத்தொண்டில் ஒருமனப்பான்மையுடன் சிவத்தொண்டு செய்வதற்கும் பொன்னுன காலத்தைப் பங்கிட்டு, இங்கு எழுந்தருளிக் காட்சிகொடுக்கும் நிலையினை நோக்குந்தோறும் உள்ளம் அளவிலா உவகையடைகிறது. இத்தகைய தகுதி நிறைந்த தங்களனைவரையும் வரவேற்கும் பேறு பெற்றமைக்குப் பெருமையடைகிறேன்,

தங்களனைவரையும் மனங்கனிந்த மகிழ்ச்சியோடு வருக! வருக! என அன்போடு வரவேற்கிறேன். நல்லாரைக் காண்பதுவும் நன்றேயன்ருே! இந்த ஆண்டு சமாஜ ஆண்டு நிறைவும் அடுத்த ஆண்டுத் தொடக்கமும், தமிழ் நாட்டில் தனித்துச் சிறக்கும் புதுவையம்பதியில் இப்போது கூடுகிறது.

புதுவை மாநகரம் பழம் பெருமையும் புதுச்சிறப்பும் உடையது. இந் நகரத்துப் பன்னூருண்டுகளாகப் பலப்பல துறைபோய நல்லறிஞர்களும், செல்வர்களும், முனிவர்களும், ஞானிகளும் வாழ்ந்திருக்கின்றனர். சைவத் திருமடங்களும், வேதாந்த மடங்களும், சிவபூஜா துரந்தரர்களும், நுண்மாண் நுழைபுலம் மிக்க புலவர்களும், பெருங் கவி வாணர்களும், ஈந்து உவக்கும் செல்வச் சீமான்களும் இந் நகரத்திற்குச் சிறப்புத் தந்துள்ளனர். இந்நூற்ருண்டுட் பெருங் கவிஞராய் விளங்கிய பாரதியார் இந் நகரத்துத்தான் தம் கவி வளம் காட்டினூர். இன்றும் அத்தகைய அறவாணர்களும், அரும் புலவர்களும் வாழ்கின்றனர். இங்கே சமாசம் இப்போது கூடுவதும் ஒரு நல்ல முடிவு காண்பதும் நம் நாட்டிற்கு உவந்த சமயப் பணியாற்றுவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்றே நம்பிச் சான்ருேராய தங்களை மனமுவந்து வரவேற்கிறேன். வருக! வருக!

இன்று இப்புதுவை நகரம் பன்னெடுங் காலமாக அந்நிய ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெற்று உரிமை யுடையதாய்ப் பாரதத்தாயின் பல்லுறுப்புக்களுள் ஒன்றாய்த் திகழும் பெருமை பெற்று விளங்குகிறது. இந்த நேரத் தில் பல் சமயக் கூட்டுறவில் வாழவேண்டியுள்ள நாம் தனித்துச் சைவ சமய வளர்ச்சிக்கு ஆவன வற்றை யறிய வும், செய்யவும் தலைப்படும் இந்த அரும்பெரும் சமாச வாயிலாகத் துணிவு கொள்வதற்கும் தக்க இடம் புதுவையே என்பதையும் நினைந்து மகிழ்கிறேன். அம் முறையில் ஆக்கப் பணிகளை மேற் கொள்ள எழுந்தருளி யுள்ள உங்களனைவரையும் மகிழ்ச்சியோடு வரவேற் கிறேன், வருக! வருக!

நம் சைவ சமயம் காலங் கடந்த சமயம். மனிதன் எப்போது உணர்வினுல் தெய்வம் உண்டு என்ற துணி விற்கு வந்தானே அப்போது வழிபாட்டிற்கென்று அவன் அனுபவத்தினுல் உணர்ந்த தெய்வச் சமயம் சைவம். அனைத்தையும் ஒன்றெனக் காணும் நிலையிலும் நிலம், நீர், தீ, காற்று, விண், ஞாயிறு, திங்கள், உயிர் என்ற உலக மனைத்தையும் பிரித்தும், அனைத்தும் ஒன்றே என்றும், அறுதியிட்டு அறிந்த சமயம் சைவ சமயமே. அதனுல் பலவாய்க் காணப்படும் பொருள்கள் ஒன்றாகவும், ஒன்றாய்க் காணப்படும் பொருள் பலவாகவும் அமையும் நிலையினை அன்றே அறிந்து உலகிற்கு அனுபவத்தாற் சொன்ன விஞ்ஞான சமயம் சைவ சமயமே.

பார் பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்த தோர் படர் ஒளிப் பரப்பே!

என்பது மணிவாசக மன்றே? அத்தகைய உண்மை நிலை கண்ட சமயக் கருத்துக்களை; உள்ளனுபவங்களை நம் சான்றோர் சமுதாயத்துக்கு வழங்கிய முறையினை நாமறிந்து

நாமும் நம்முடன் வாழும் சமுதாயத்திற்குக் கூறி, ஒன்றிய நினைவுடையராய்ச் செயலாற்றத்தானே இங்கே குழுமியுள்ளோம்? சிவம் என்ற பொருள் நிறத்தையும் குணத்தையும் உணர்த்துவதாகும். அதனால்தான் அதனைப் பொது நூலுடையார் செம்பொருள் எனக் கூறினர்.

"பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பதறிவு.

செம்பொருள், சிவம், தோற்றத்தில் செந்நிறமும். பண்பிற் செம்மைப் பண்பும் உடைய பொருள் என்பது செம்பொருள்.

செம்மையே யாய சிவ பெருமானே
செம்பொருள் துணிவே சீருடைக் கழலே

சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான் என்பன போன்ற திருவாக்குகள் நிறமும் பண்பும் உடைய பொருளே சிவம் என்பதனை உண்மைப் படுத்துகின்றன. சிவப்பு நிறம் கண்ணுக்குப் புலனாவது. செம்மைப் பண்பு கருத்தால் உணரத் தக்கது. எனவே சிவம் என்ற பொருளும் புலனாகும் உலகமாய உருவமாகவும் அனுபவத்தால் உணரும் அருவமாய பொருளாகவும் உள்ளது என்பதனை நாமறியலாம்.

உருவம் கண்ணுக்குத் தெரிவது. புலனால் காண்பது. அருவம் கண்ணுக்கும் புலனுக்கும் அப்பாலாய் உணர்வால் அனுபவிக்கப்படுவது. குணமாகிய பண்பும் நிறம், தோற்றம் முதலியவற்றால் கண்ணுக்கும் புலனாவதும் உணர்வான் அனுபவிக்கப் படுவதும் என இரண்டாம். சிவப்பு, கறுப்பு, வெண்மை முதலாய நிறப்பண்பும், அன்பு, அருள் முதலிய குணப்பண்பும் மேற் கூறியவாறு

நிற்றலை நாமறிகிறோம். எனவேதான் இறையாய சிவத்தை உலக உருவமாய்க் காணும் நிறத்தைக் காட்டிச் சிவ மெனவும் உணர் அனுபவமாய அன்பு அருள் வடிவாகச் சிவமெனவும் இரு பெரு நிலையும் உடைய பொருளே சிவம் எனவும் கூறினர். இதனையே நாம் உருவம் அருவம் இரண்டும் இலான் எனச் சிவனை அழைப்பதாகக் காண் கிறோம். தோற்றம் கவர்ச்சியையும், அனுபவம் இன்பத் தையும் நமக்கு அளிக்கவேண்டும். அனைத்திலும் காணப் படும் பொருள் தன்மையைக் காணும். நல்லறிவு நமக்கு நாளும் தலைப்பட வேண்டும். ஒரு நல்லோனைக் காணும் போது அவன் உருவத்தை மட்டும் காண்பதில்லை; அவ னுடைய குணம். செயல் இரண்டனையும் உணர்ந்து காண் கிறோம், அங்குணர் செயல்களை அவன் உருவத்தில் அமைத்துக் காண்பதால் நமக்கு ஒரு ஈர்ப்பு ஆற்றலும், உள்ள நெகிழ்ச்சியால் உளதாம் இன்பமும் உண்டா கின்றன, இதனை நமக்கு ஆசாரிய மூர்த்திகளாய் வந்த பெரியோர்கள் இப்படிக் காணுங்கள், கருதுங்கள் என்று உபதேசித் திருக்கின்றனர்.

" ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை
கன்றிய காலனைக் காலால் கடிந்தான். அடியவர்க்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்து நட்டம்
என்றுவந்தாய் எனும் எம்பெருமான்தன் திருக்குறிப்பே''

என்ற திருப்பாட்டால் உறவும் செயலும் பிணைந்து காணப் படுவதை அறியலாம். இங்கே தோற்றம் ஈர்த்தலையும், குணம், செயல்கள், நம்மை உருக வைத்து இன்பம் பயத்தலையும் காண்கிறோம். நாம் எந்தப் பொருளை நேசிக்கிறோமோ அந்தப் பொருளின் குணமும் தோற்ற மும் நம்மைச் சாரவேண்டும். அவற்றைப் பெறுவதற் காகத்தான் நாம் அப்பொருளைச் சார்கிறோம். வறியன் ஒருவன் செல்வனைச் சார்வது வறுமை நீங்கி அச்செல் வனைப்போல் உண்டு உடுத்து வாழவே அன்றோ? அறிஞன் ஒருவனைச் சார்வது அறியாமை நீங்கித் தெளி

வடைய அல்லவா? ஆத்மானுபவமுடையான் ஒருவனைச் சார்வது யான் எனது நீங்கிப் பிறவிப் பயனை யடைதற்கேயாம். ஆகையால் நாம் சிவமாம் செம்பொருட் சார்புடையோம் என்றால், நாமும் தோற்றமும் செயலும் குணமும் பெற்று அப்பொருட் சார்புடையோம் என்ப தனைப் பிறரும் அறியும்படிச் செய்யக் கடமைப் பட்டுள் ளோம். அச்சார்புகள் எவை?

சார்புகளைச் சாதனம் என்றும், சாத்தியம் என்றும் இரு பிரிவாகப் பிரிக்கலாம். சாதனம்: கருவி, சாத்தியம்: பயன்.

## சாதனம்

சைவர்களாய நமக்குச் சாதனம் திரு நீறும் அக்க மணியும் ஐந்தெழுத்தும் ஆகும். திரு நீறும் அக்கமணி யும் புறச்சாதனம், ஐந்தெழுத்து அகச் சாதனம்.

புறத்தே காண்பவர் அனைவர்க்கும் இவன் இன்னான் என்று வாயிற் கூறுது வடிவம் கண்ட மாத்திரத்தே யறியும்படி வைப்பது. திரு நீறு பூசுவானைக் கண்ட மாத் திரத்தில் இவன் சிவனடியான் என்று அறியும்படி வைப் பது. அத் திரு நீறு அம்மட்டோ? பூசும் நீற்றினுல் உள்ளமுந் தூயன் என்று உணர வைப்பதும் திரு நீருகும்.

"பூசும் நீறுபோல் உள்ளம் புனிதர்கள்"

என்பது திருமுறையன்றோ? மேலும் நாவுக்கரசர் பெருமான்

"திரு நீறும் சாதனமும் கண்டாய் உள்கி"

என்றருளியதை நீள நினைந்தால் எத்தனை உண்மைகளை உள்க வைக்கிறார் என்பதைப் பெரியோர்கள் நினைந்தின்புற வேண்டுகிறேன். தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனி காண்போர் உள்ளத்தைக் கவரவேண்டும். உருகவைக்க வேண்டும். தாழ்வடம் ஆம் அக்கமணி அரனை நினைவூட்ட வேண்டும். காணு தாரையும் கண்டவரையும் இறைவனை நினைப்பூட்டும் சின்னமாக அமைந்தமையால் திரு நீறும் தாழ்வடமும் சாதனமாய் அமைகின்றன. நம்மனோர் திரு நீறு பூசி அக்கமணியணிந்து காட்சியளிக்க வேண்டும். காண்பார் இவர் சிவனடியார் என மதிக்க வாழ வேண்டும். இந்நாளில் திரு நீறு பூசுவதும் அக்கமணி அணிவதும் அருகி வருகிறது. சிலர் பற்றுடையராயினும் உலகியலுக்காகப் பூசக் கூசுகின்றனர். உள்ளத்துறுதி செயலில் வெளிப்பட வேண்டும். சிவனடிக்கன்பராம் செம்மையுடைமையைத் திரு நீறணிந்த வேடத்தால் மெய்ப்பிக்க வேண்டும். திரு வெண்ணீறணியாத திரு விலிகளாகக் காட்சி யளித்தலாகாது. இந்நிலை வருமாயின் குடும்பங்களிலும் பெண்டிரும், ஆடவரும், மக்களும், சுற்றமும், நீறணிந்த நெற்றியினராய்த் திகழக் காணலாம். பின்னர்ப் பிறரையும் அக்கோலம் கவரும். திருநாவுக்கரசர் திரு நீறணிந்து நெஞ்சம் அஞ்செழுத்தோத அன்புகசிந்து கண்ணீர் பெருகத் திருவதிகை வீதிவழியே செல்கிறார். காண்கிறார்கள் புறச் சமயப்புன் சமணர்.

"கண்டார்கள் கைதலை மேற்குவித்து இக்கருணை
கண்டால் மீண்டாய அமண் கையர்
தீமை இழைத்த வண்ணம் எவ்வண்ணம்"

என்று தொழுதார்கள் என்று சேக்கிழார் அருளுகிறார். ஆகையால், திருநீற்றுப் பொலிவழகால் பிறரையும் ஈர்க்கும் பெருமையோடு சைவர்களாய நாம் முன்னே காட்சியளிக்க வேண்டும்.

உள்ளந் தூய்மையே புறந் தூய்மையின் பயன் என்பதனை மறக்கலாகாது. உள்ளந் தூய்மை பெருது புறங் கழுவுவதாற் பயனில்லை. உள்ளம் அன்பால் நிறைந்து அறிவால் செயல்பட முனைய வேண்டும். அறிவு தெளிவை யுண்டாக்கும். அன்பு பிறருக்கு உதவ முற்படும். அன்பு ஆர்வத்தையும், ஆர்வம் நட்பினையும் நல்குவது என்றார் வள்ளுவர். எப்படி உதவுவது? எதனை உதவுவது? என் றறிவது அறிவு. அதனுல்தான் இறைவனை அனுபவத்தாற் கண்ட செம்மையோர். 'அன்பே சிவம் அறிவே சிவம்' என்றனர். திருமூலரை நோக்குங்கள் அன்பும் அறிவுமே இறைவன். அன்பின் முதிர்வு அருள். அருளே அம்மை. அறிவின் முதிர்வு மெய்ஞ்ஞானம், மெய்ஞ்ஞானமே பதி யாய அப்பன். அம்மையப்பரே சிவமாம் செம்பொருள் என்பதனை நாமறிவோம். அநாதியாய் அருவமாய், உருவ மாய், ஒன்ருய்ப், பலவாய், நின்ற ஒளிப் பிழம்பு சிவ மெனும் பெயரோடு நம் தமிழர் போற்றிய முறையில் நாம் போற்றும் கடப்பாடுடையோம். ஆகையால், நாம் உருவத்தால் நீறணிந்த நெற்றியராய் உளத்தூய்மையும், செயல் தூய்மையும், சொற்றூய்மையும் உடையராய் முன்ன தாக விளங்கத் தயக்கமின்றிப் பாடுபட வேண்டும். இறை நிலை, பணி நிலை என இரண்டில், இறைநிலை நம்மிடம் காண வேண்டுமாயின் பணிநிலை நம்மிடம் மிளிர வேண் டும். பணிநிலை என்பது எவ்வுயிரும் ஈசன் உறை கோயில் எனக் கொண்டு, உயிரிரக்கம் உடையராய் வாழும்போது, நாம் உயிர்க் குதவுகிருேம் என்ற எண் ணம் தோன்ருது, இறைவற்குப் பணி செய்கிருேம். என்ற எண்ணமே தோன்ற நிற்பதே பணி நிலையாம். பணி நிலையும் இருதிறத்தது, ஒன்று, தன்னைத் தகுதியுடைய ஞக்கிக் கொள்வது, மற்றென்று பிற உயிர்களைத் தகுதிக்கு உரியதாக்குவது,

நம் முன்னேர், தாமும் தகுதியுடையராய்ப் பிற உயி ரினங்களையும் சிறப்பாக மனித சமுதாயத்தையும் உயர்த் தத் தொண்டென்னும் பணியில் நின்றனர்,

"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற திருவாக்கும் 'அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால், இன்ப நிலை தானே வந்தெய்தும்' என்ற தாயுமானார் வாக்கும் இதனை உண்மைப் படுத்தும். ஆகையால் நாம் சிவமாந் தன்மைபெற அன்பே உளமாய், ஆர்வத்தோடு அன்பர் பணி செய்ய முற்பட்டால் நாமுயர்வதோடு-தகுதி பெறுவதோடு பிறர்க்கும் தொண்டு செய்து புகழ் பெற்றவராவோம். சமயங்களான வற்றின் நல்லாறுகளில், ஒழுக்கமும், தொண்டுமே அச்சமயங்களை உயர்த்துகின்றன, கவர்கின்றன. என்பதனை வழி வழியாக நாமறிந்து வருகிறோம். நம் சமயமாம் சைவ சமயமும் கூட இடைக்காலத்தில் ஞானசம்பந்தர், நாவுக்கரசர் போன்ற நன்மக்களுடைய ஒழுக்கம், தொண்டு இவற்றால் வளர்ந்தது என்பதனை மறுப்பார் யார்? இன்றைய நிலையில் சமயத் தொண்டு இன்றியமையாதது.

சமயத்துறையில் நிற்கின்ற நம்போன்றவர் ஒழுக்கமும் தந்நலமின்மையும் உடையராய்த் தொண்டாற்றினால் விரைவில் சமுதாயம் நன்னெறிப்பட ஒரு வாய்ப்புண்டாகும் என்று எண்ணுகிறேன். அதற்கு என் செய்வது ?

பிற சமயத்தினர் சமயத்தின் பேரால் கல்வியறிவைப் புகட்டி, நோய்க்கு மருந்து கொடுத்து, ஏழைகட்கு உதவி செய்து, தம் சமயத்தைப் போற்றித் தொண்டு பல புரிந்து பிற சமயத்தினரையும் கவர்ந்து தம் சமய வளர்ச்சிக்கு ஆக்கந் தேடுவதையும் நாம் கண்டு வருகிறோம். எத்தனை உண்மைகளைக் கொண்ட, கண்ட நம்சமயத்தினர் இத்தனையையும் கண்டு புறம்பேசிக் கழிக்கின்றனரேயன்றித் தாம் செய்யவேண்டிய தொண்டினை மேற்கொண்டாரில்லை. இப்போதும் ஓரிடத்திற் கூடிப் பெருமைகளையும் உண்மைகளையும் பேசி மகிழ்ந்து பிரிவதே சமயத் தொண்டெனக் கருது வாரும் உளர். நாம் அங்ஙனமின்றி ஆக்க வேலைக்காகவும், சமயப் பணிக்காகவும், நம்மை நம்மிற் பலரை ஆளாக்கிக் கொள்ளல் வேண்டும்.

பிரசமாசத்தினர் அனைவருமே தொண்டுசெய்வதில்லை. அவர்கள் தங்கள் சமய ஒழுக்கத்தில் தலை நின்று தம் சமயத் தொண்டுக் காகச் சிறிது பொருளுதவி செய்து அத் தொண்டு செவ்வனே நிறை வெய்துகிறதா என்பதனை ஊன்றிக் கவனிப்பதோடும், வழிப்படுத்துவதோடும், அறிவுரை கூறுவதோடும் நிற்கின்றனர் என்பதனை நாமறிவோம். நாமும் சமயத்திற்காகச் சிலரை அல்லது பலரை நம் சமயத்தொண்டிற்கு உரியவர்களாகச் செய்து அவர்கட்கு ஆவனவற்றை நம்முள் பலர் பங்கு கொண்டு பொருளுதவிச் சிறந்த முறையில் தொண்டு நிறைவெய்துகிறதா என்பதனைக் கண்காணிப்பதுடன், அங்ஙனம் அறிந்து செய்வார் தம் உடனிருந்து அனுபவிக்கும் அந்நிலை வளரவேண்டும். வளர்க்கவேண்டும் என்று நான் நீண்டநாளாக நினைந்து வந்ததும் வருவதும்உண்டு. இன்று அந்த நினைவைத் தக்கோர்களாய உங்கள் முன் வைக்கிறேன். எனவே ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டுகிறேன்.

இன்றைய நிலையில் சிற்சில இடங்களில் சமயச்சார்பான அவைகளும் தொண்டுகளும் தனித்த முறையிலும் கூட்டு முறையிலும் நிகழ்வதை நான் அறிவேன். அவைகளும்கூடப் பேச்சளவில் சமய வளர்ச்சியும் பற்றும் உடையோர்கட்குமே பயன் விளைப்பனவாய்ச் சமயம் இன்னது என்றே தெரியாதவர்கட்கு உதவி செய்வனவாய் அமைந்துள்ளனவா? அமைகின்றனவா? என்றால் இல்லை என்றே சொல்லலாம் அப்படி நிகழ்கிற நிகழ்ச்சிகளும் பேச்சளவாகவே அமைந்து விடுகின்றன. செய்வோரும் கீழிறங்கிச் சமுதாயத்திற்குப் பயன் படும்வகையிற் செய்வதுமில்லை. இனிமேலாவது நம் சமாசம் அப்பணியைத் தன் பணியாக மேற்கொண்டு நேரிடையாகச் சமுதாயத்திற்கும் பயன்படும் வகையில் பணிபுரியத்திட்டம் தீட்ட வேண்டும்

சைவந்தழைத்தோங்க அருட்பணிகள் பல நடைபெற்று வருகின்றன. சென்னை மடத்துச் சார்பில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந் தரத் தம்பிரான் அவர்கள் நாளும் நற்பணிபுரிந்து வருதல் கண்கூடு. திருவாரூரில் இறையன்புடன் திருத்தொண்டர் நாவுக்கரசருக்குக் கோயில் அமைத்தும் அடியார் திருக்கூட் டங்களைப் பல தலங்களுக்கு அழைத்துச் சென்று சேவித் தற்கு வாய்ப்பை நல்கியும் சைவத்தொண்டுகள் புரிந்தும் வருதல் எல்லோருமறிவர்

திருவாவடுதுறை தருமபுரம் போன்ற ஆதீனங்கள் சைவ சித்தாந்த சாத்திர நூற்களுக்கு விரிவுரை, விளக்கவுரை முதலியன புலவர்திலகங்களான கடலூர் ஸ்ரீநிவாசாச்சாரியார் ச, தண்டபாணி தேசிகர் முதலிய அறிஞர்களைக் கொண்டு எழுதுவித்துப் பெரும்பணிபுரிந்து வருதலைக் காணலாம். திரு. ஸ்ரீநிவாசாச்சாரியா சைவசித்தாந்த நூல்கள் பலவற் றிற்கு விழுமிய உரை வகுத்துப் பெருந்தொண்டாற்றி வரு கிறார்கள். அவர்தம் நுண்மாண் நுழைபுலந்தோன்ற திருமந் திரத்திற்கு உரைகண்ட பெற்றியை என்னென்று கூற வல்லேன்?

தமிழ்த்துறை போய நற்றமிழ்த் தொண்டர் திரு, கிரு பானந்தவாரியார் அவர்கள் நானிலப் பகுதிகளுக்குச் சென்று அப்பர் சுந்தரர் சம்பந்தர் மாணிக்கவாசகர்போலத் தம் அரும்பெரும் சொற்பொழிவுகளால் சைவ மணங்கமழச் செய்யும் திறன் உரைக்கத்தக்கதோ ?

இந்த நல்ல சமயத்தில் நம் மாநாட்டுத் தலைவராக வீற் றிருக்கும் சைவச்செம்மல் திரு, கா, இராமநாதன் செட்டியார் அவர்களைப் பற்றி நினைவுகூர்வது சாலப்பொருத்தமே. திரு, செட்டியார் அவர்கள் சைவந்தழைத்தோங்க மலாயநாட்டில் பெரும்பணிபுரிந்து வருகிறார்கள். நுண்மதியும் சொல்வள மும் ஒருங்கேயமையப் பெற்றவர். பல நூல் ஆசிரியரும் ஆவர். கோலாலம்பூரில் இருமுறை மாநாடுநடத்திச் சைவத்

தைப்பரப்பிய செம்மல் இத்தகையோர் சைவமணமும் தமிழ் மணமும் கமழுமாறு பணிபுரிந்து வருதல் நம்மனோர்பெற்ற வாய்ப்பாகும்,

புதுவை மாநிலத்தில், முன்னாள் அரசியலில் மிகுந்த சிறப்பெய்து அதிகாரம் பெற்றிருந்த, இன்னாள் முதலமைச்சர் திரு எதுவார் குபேர் அவர்கள். எவ்வாற்றானும் விடுதலை யடைய வேண்டுமென்ற கொள்கையுடையராய்த் தக்க சமயத்தில், மிகவும் சாமர்த்தியமாகவும், முன்னுணர்வுடனும் விடுதலைபெறச்செய்த சதுரப்பாடு வரலாற்றில்பொன்னெழுத்தால் பொறிக்கத்தக்கது

சமயமும், அரசியலும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், கூர்ந்து நோக்குங்கால் சமயம் வேறல்ல அரசியல் வேறல்ல என்றதோர் தத்துவத்தில். திரு. எதுவார் குபேர் அவர்கள் அரசியல் மேதையாக எங்ஙனம் காட்சியளிக்கின்றாரோ அதைப்போல் மதத்திலும் தொடர்புடையராய்ப் பன்மையில் ஒருமையைக் காணும் பெற்றியுடையராய்த் திகழ்கிறார். அத்தகைய மாபெரும் அரசியல் மேதையால் இச்சமாசத்தைத் திறந்துவைக்கும் வாய்ப்பு நமக்குக்கிடைத்ததைப் பற்றிப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

புதுவைப்புலவர்கள்பலர் இங்குப் பெரும்புகழ்பெற்றிருக்கின்றனர். என்பது வரலாற்றுண்மை, தமிழ்ப் பெரும் புலவர்கள் பங்காருபத்தர், வீ. துரைசாமி முதலியார் முதலியோர் தமிழ்த்தாயை அரியாசனத்திலேற்றி மகிழ்வித்தனரன்றோ? நம்காலத்தும், நற்கவிபியற்றி தமிழோசை முழங்கச்செய்யும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நம்மிடையே வாழ்ந்து வருதல் நாம் பெற்ற வாய்ப்பல்லவா? இன்னும் புலவர் பலரும் கவிஞர்களும் மற்றையமாநிலங்களைப் பார்க்கினும்இங்குப்பெருந்தொகையாயிருந்து தமிழ்த்தொண்டுபுரிந்து வருதலையும்நாம் மறத்தலாகாது.

நம் முன்னோர், திருநாளைப் போவாரையும், ஏனாதிநாதரையும் அமர் நீதியையும் திருநீலகண்டரையும் கண்ணப்பரையும், மூர்க்கரையும், காட்டி வழிபடச்செய்தது ஏன் ? என்ற நினைவு எனக்கு வருவதுண்டு. சமயம் எத்தொழிலைச் செய்தாலும் எந்நிலையில் இருந்தாலும் அவர்கட்கும் உரியது. அவர்களும் சமயத்தால் பிறவிப்பயன் அடைவர் என்ற உண்மையை அவரவர் நிலைக்குக் காட்டி வழிப்படுத்தவே அவ்வாறு வகுத்தனர். என நினைப்பதும் உண்டு. ஆகையால் சான்றோர்களே! நாம் சமயப் பணியில் ஈடுபடும் போது சமுதாயத்திற்கும் பயன்பட வேண்டும் என்ற எண்ணமும் தொண்டும் உடையவர்களாவோம் என்ற உறுதியோடு இன்று உங்களனைவரையும் வரவேற்கிறேன்,

இன்றைய நிலையில் நீண்டு பேசிவிட்டேன், ஆகையால் இன்னும் ஒன்றே ஒன்று கூறி என் வரவேற்புரையை முடிக்க எண்ணுகிறேன்.

இன்றைய உலகம் விஞ்ஞான உலகம். விஞ்ஞானம் உலக நிகழ்ச்சிகளை இருந்த இடத்திலிருந்தே காணச் செய்கிறது. எந்த இடத்திற்குச் செல்ல வேண்டுமானாலும் ஏன், வேறு உலகத்துக்குச் செல்லவேண்டுமானாலும் விஞ்ஞானம் நமக்கு உதவுகிறது, அன்றியும் அழிக்கவும் ஆக்கவும் முடியும் என்பதனை விஞ்ஞானம் ஓரளவும் உண்மைப் படுத்துகிறது. இந்த நிலையில் மறு பிறப்பும் வினைப் பயனும் தெய்வ சிந்தனையும் சமுதாயத்தில் உண்டாகும்படிச் செய்யும் சமயப்பணி எப்படியிருந்தால் பயன் படும் என்பதனையும் நாம் சிந்தனை செய்ய வேண்டும். அறிவு சூழ்நிலைக்கேற்ப, சிந்திக்கும் ஆற்றலுடையது ஆகையால் சான்றோர்களாய நீங்கள் இன்றைய சூழ்நிலையை மனத்திற்கொண்டு, சிந்தித்து அன்பும் அறனும் கடைப்பிடித்துப் பண்போடு செயலாற்றினால் அன்றிச் சமய எண்ணம் சமுதாயத்தை இன்றைய நிலையில் கவர முடியாது என்பது உறுதி.

ஆகையால் சான்றோர்களே! சைவ மெய்யன்பர்களே! நான் ஏதோ தெரிந்தவன் போலஉணர்ச்சி வசப்பட்டுச் சமயப்பற்றினல் சில கூறிவிட்டேன். நீங்கள் இந் நன்னுளில் சிந்தித்து ஆவன செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடையேன்' நீங்கள் செய்யும் நல்லதோர் முடிவு நாட்டுக்கும் மொழிக்கும் சமுதாயத்துக்கும் சமயத்துக்கும் நன்மை பயப்பதாக அமையும் என்ற உறுதி யுடையேன். நாடு பழம் பெரு நாடு. தமிழர் கற்றேன்றி மண்தோன்ருக் காலத்தே வாளோடுமுன் தோன்றி மூத்தகுடியினர். மொழியோ என்றுமுளதென் தமிழ். சமயமோ எல்லார்க்கும் முன்னே தோன்றி முளைத்த சமயம். எனவே இவ்வளவும் வழிவழியாகச் சிறந்துவிளங்கும் பெருமை நமக்கே உரிமை. நாமே உலகிற்கு வழிகாட்டவேண்டியவர்கள். ஆகையால் நீள நினைந்து நிலைகுலையா வண்ணம் செயலாற்ற முற்பட, அனைத்துக்கும் வித்தாய், அறிவருளாய அம்மையப்பர் திருவருள் நமக்குத் துணையாய் உள் நின்றியக்க நாம் செயல்படுவோமாக. அன்பர்களே! அவனன்றி ஓரணுவும் அசையா தென்ற ஆப்த மொழிப் படி அவனருளே கண்ணுகக் கண்டு அடியன்பு பேணும் உங்களை அன்போடு, வரவேற்கிறேன்.

வாழ்க செந்தமிழ்! வாழ்க சைவ மெய்ச்சமயம்!
வாழ்க சமயத் தொண்டு! வளர்க சமாசம்!

ஞால நின்புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே.

(ஞானப் பிள்ளையார்)

பிள்ளை (இலங்கை), அருள் தியாகராஜா (இலங்கை) குல. சபாநாதன் (இலங்கை), டாக்டர் எம். இராசமாணிக்கனர் எம். ஏ., எல், டி., எம். ஓ. எல்., பி. எச். டி., ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ.எல்., சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் பி.ஏ., பி.எல்., எம். இ. சரசுவதி எம். ஏ., டாக்டர் தேவசேனபதி எம். ஏ., பி. எச். டி., வித்துவான் மீனட்சி சுந்தரசிவை, கா. ராமனதன் செட்டியார், கீ.இராமலிங்கனர் எம். ஏ.,

ஆராய்ச்சிக் கழகம் :— மேலையூர் மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள், வித்துவான் ந. சிவப்பிரகாச தேசிகர், சிதம்பரம் வித்துவான் சொ. சிங்காரவேலனர், வித்துவான் அ. மு. பரமசிவானந்தம் எம்.ஏ., எம். லிட்., வித்துவான் அருணைவடிவேல் முதலியார்.

வெளியூர் ஆலோசனைச் சபையினர் :—

தஞ்சாவூர் :- டாக்டர் அழகப்பா அண்ணமலை ஆர். திருநாவுக்கரசு முதலியார், கும்பகோணம், T. S. சுவாமிநாத முதலியார்.

கன்னியா குமரி :- சி. வள்ளிநாயகம் பிள்ளை, பி. ஏ., பி. எல்., குமரேச பிள்ளை - வித்வான்.

திருநெல்வேலி :- வி. எஸ். ஆறுமுகம் பிள்ளை, அம்பாசமுத்திரம்; வித்துவான்மறை திருநாவுக்கரசு, எஸ். எஸ். அருணசலம் பிள்ளை, பாஸ்கரத் தொண்டைமான்.

மதுரை :- கே. அரங்கசாமி முதலியார், பி. ஏ., வி. வி. சி. ஆர். முருகேச முதலியார், வித்துவான் ஔவை சு. துரைசாமி பிள்ளை,

கோயம்பத்தூர் :- கே. பி. ஆர். சுப்பராயன், சிவகிரி, எஸ். மீனட்சி சுந்தர முதலியார் பி. ஏ., எல். டி., சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், பி.ஏ., பி. எல்., இராமசாமி அடிகள், சி. ஆர். சதாசிவ முதலியார்,

தென்னர்க்காடு:- பொன்னம்பலம் பிள்ளை, இரத்தினசாமிச் செட்டியார், பாலசுப்பிரமணிய செட்டியார் கெ. ஆறுமுக நயினர், ரா. சண்முக சுந்தரஞ் செட்டியார்.

பெங்களூர்:- ஏ. ஆர். அண்ணமலை முதலியார், எஸ். கனக சபாபதிப் பிள்ளை.

கொழும்பு:- சர். கந்தையா வைத்தியநாதன், குலசபாநாதன், அருள் தியாகராஜா, சபாபதிப் பிள்ளை.

திருக்கோணமலை:- பண்டித ஆர். வடிவேலு, எஸ். அம்பலவாணன்.

மட்டக்களப்பு:- க. அருணாசலதேசிகர், பூபாலபிள்ளை.

திருச்சிராப்பள்ளி:- அரிமழம் ராம. அண. அண்ணாமலைச் செட்டியார், ஜி. வரதராஜப் பிள்ளை பி. ஏ., பி. எல்., செல்லப்பச் செட்டியார். P.M.R. S.

இராமநாதபுரம்:- சேவு மெய்யப்பச் செட்டியார், சொ. நாராயணன் செட்டியார், சிடி. எம். என். நாராயணன் செட்டியார், ஆர் எம் எஸ் திருநாவுக்கரசுச் செட்டியார், காசிநாததுரை

வடஆர்க்காடு: புரிசை—முருகேச முதலியார் வி.எஸ். கணபதி முதலியார்.

சேலம்:- வள்ளி செட்டியார் பி. ஏ., பி. எல்., அ. கு. காமாட்சி அம்மையார் எம்.ஏ., ஆர். எம். மாணிக்கம் பிள்ளை, கே. சிங்காரவேல் செட்டியார், அப்பாய் செட்டியார்.

செங்கல்பட்டு:- வித்துவான் நடராஜப் பிள்ளை திருவள்ளூர், வித்துவான் திருஞான சம்பந்த முதலியார், கே. இராஜு முதலியார், பழையனூர் சுந்தர முதலியார், நா. ப. தணிகையரசு.

புதுவை :- சேனாபதி முதலியார், R. S. பழமலை.

காரைக்கால்:- தி.சொ. தட்சிணாமூர்த்தி முதலியார், கே. எஸ். எஸ். நடேச முதலியார்.

யாழ்ப்பாணம்:- வட்டுக் கோட்டை நாகலிங்கம் பிள்ளை, எஸ். நடேசபிள்ளை, பி. ஏ., பி. எல்., ஏ. அருளம்பலம், முத்துத்தம்பி, எஸ். அம்பிகைபாகன் பி. ஏ, ஞானப்பிரகாசம்.

மலாய்நாடு:- கே. இராமநாதன் செட்டியார், பி. ஏ., பி. எல்., சிவநேயன், அ. மு. பெரியசாமி பிள்ளை, பழனிவேல் பிள்ளை ஆர். வி. கந்தையா, எம். இராமசாமி முதலியார்.

### சமாஜ மணி விழாக் கமிட்டி

தலைவர் :— அ. சோமசுந்தரஞ் செட்டியார் எம்.ஏ.,

செயலாளர்:— தி. கி. நாராயணசாமி நாயுடு

உறுப்பினர்கள் :— புலவர். ந. ரா. முருகவேள், மு. அருணாசலம் சி. என். சிங்காரவேல் முதலியார் ஜி. கல்யாணம்பிள்ளை.

---

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1. by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai B.A., L.T., for the Saiva Siddantha Maha Samajam 12, East Mada St., Mylapore, Madras-4.